# பெண்



தொகுதி : 12 இலக்கம் : 01

'தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்'

# பெண்

தொகுதி : 12 இலக்கம் : 01

R. Sivalingam's Books Collections
No: 10, Buntings Lane,
Batticaloa.

Date .................... No ....................

## 2007

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு.

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை
இல. 20, டயஸ் வீதி.
மட்டக்களப்பு.

தொலைபேசி இல: 065 - 2223297

Fax No : 065 - 2224657, e-mail Suriyaw@slt.lk

R. Sivalingam's Books Collections
No: 10, Buntings Lane,
Batticaloa
Date ..........

**THE WOMAN** - A Journal Published by
Suriya Women's Development Centre,
No: 20 Dias Lane,
Batticaloa.

ஆசிரியை :- விஜயலட்சுமி சேகர்

அட்டை :- யுத்தத்தினால் இடம் பெயர்ந்தோர்
புகைப்படம் :- விஜயலட்சுமி சேகர்

அச்சகம் :- வணசிங்கா அச்சகம்,
126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.

விலை :- 40/=

# உங்களுடன்...

அனைவரும் சமாதானமாக, சமத்துவமாக வாழ்ந்தால் அங்கு ஒற்றுமை அத்திவாரமாக இருக்கும். சுதந்திரம் வாழும். சுய ஆளுமைக்கு இடம் இருக்கும். ஆண், பெண் இருவருக்குமே இதில் சம பங்கு உண்டு. எனினும் எமது காலங்காலமான, ஒரு பக்கச்சார்பான பெண்களுக்கான வரையறைகளாலும், கட்டுப்பாடுகளாலும் பெண்கள் இன்றுவரை சமூகத்தில் பல பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். பெண்நிலை வாதிகளும், பல பெண்கள் நிறுவனங்களும் இச் சமத்துவமின்மையை களைவதற்காகப் போராடி, செயற்பட்டு வருகின்ற போதும், இன்றைய எமது தொழிநுட்ப ரீதியிலான முன்னேற் றங்களானது நடு வீட்டிற்குள் இன்னும் பழைய மரபுகளை வாழ வைத்துக் கொண்டிருக்கும் காட்டுமிராண்டிச் சமுதாயத்தை கண் முன்னே ஓடவிட்டுக் கொண்டுள்ளது. உதாரணமாக இன்றைய தொலைக்காட்சித் தொடர்களில் பெண்கள் வெறும் அலங்கார அடிமை களாக, சூனியக்காரிகளாக வடிவமைக்கப்படுவது, இணையத்தளங்களில் நகைச்சுவை என்ற பெயரில் பெண்களைப் பற்றிய விம்பங்கள் தலைகீழாவது.... ('பெண்' 11:2) இன்னும் தொடரும் இப்படியான அம்சங்கள் எமது வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து கொண்டே வரும் சமூகப் பிரச்சினையாக உள்ளது. ஆகவே எமது செயற்பாடுகளை வீட்டிற்குள் இருந்தே நாம் ஆரம்பிக்க வேண்டும். ஆகவே நாம் சமத்துவ உலகை நோக்கிச் செல்லப்போகிறோமா..., அல்லது கண்ணுக்குச் சிக்காத அடிமை விலங்கு பூண்டு வீட்டிற்குள் விடுதலை இன்றி வாழும் சமூகத்தை இன்னும் வாழ வைக்கப் போகிறோமா... என்பதை நாம்தான் சிந்திக்க வேண்டும். இதற்கான பொறுப்புள்ளவர்களாய் அனைவருமே உள்ளோம். ஆகவே இனிவரும் நாட்களில் "பெண்" இதழானது இது தொடர்பான சந்திப்புக் களமாக அமைய அனைவரின் கருத்துக் களையும் எதிர்பார்க்கின்றது.

**அன்புடன்**
ஆசிரியை

# உள்ளே.....


- தொலைக்காட்சி நாடகங்கள்
- கணவருக்காக கதைகளுக்காக...
- தொலைக்காட்சி தொடர்களும் சமூகத்தில் தொடரும் சீரழிவுகளும்
- தொலைக்காட்சித் தொடர் நாடகங்களில் பெண்கள்.....
- திரையினால் விலங்கிடப்படும்...
- நிஜமும் நிழலும் – திரைக்குள்ளிருந்து வரும் பூதம்
- பெண்களுக்கெதிரான வன்முறைகளின் சமூக வெளிப்பாடுகள்
- சாம்பல் விதைப்புக்கள்
- கரையோர கடல் வேட்டை – நூல் அறிமுகம்
- பனைமரத்தில் எப்படி ஏறினேன்....
- அவளுக்காய் ஒரு நிமிடம்
- நதியும் நண்டும்
- வன்முறை – பண்பாடு – எதிர்வினை ஆற்றல்கள்
- தவறு
- அடையாளம்
- வேலை செய்யும் பெண்களும் அவர்களின் கருத்தியல்களும்
- கனாக் கண்டேன்
- ஒழுக்கம் பெண்ணுக்கு மட்டுமா?
- உதிரும் நினைவுகள்
- கண்டுபிடியுங்கள்
- கண்ணுறங்கு கண்ணுறங்கு
- வாசகர் கடிதங்கள்

# தொலைக்காட்சி நாடகங்கள்

– சமூகம் ஒரு பார்வை –

மாலை வேளைகளில் கோவிலுக்குச் செல்பவர்கள் 6.30க்கு முன் வந்து விட வேண்டும், என்று கடவுளுக்கே நேரக்கணக்கு காட்டும் அளவுக்கு கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது இந்தத் தொலைக் காட்சி நாடகங்கள்

குடும்ப நாடகங்கள் என்று கூறப்படும் இவை குடும்பங்களை சீரழிப்பவையாகவே காணப்படுகின்றன. சிறு குழந்தை முதல் பெரியவர் வரை நேரம் தவறாது தொலைக்காட்சி முன் உட்கார்ந்து விடுகின்றனர். குடும்பத் தலைவிகளுக்கு வீட்டுக்கு வரும் விருந்தினரை வரவேற்க நேரமில்லை. உறவினர் வீடுகளுக்குச் சென்று உறவை மேம்படுத்தவும் நேரமில்லை. இப்போது எல்லாம் உறவினர் வீடுகளுக்கு செல்லவும் நேரம் தெரிவு செய்ய வேண்டி உள்ளது. நாடகங்கள் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படும் நேரங்களில் சென்றால் வரவேற்புக்கு கூட பஞ்சமிருக்கும்.

தொலைக்காட்சி முன்னால் உட்கார்ந்து நாடக கதாநாயகி அழுதால் அழுது, சிரித்தால் சிரித்து பின், “தொடரும்” திரையில் விழுந்தவுடன் நாளை என்னவாகுமோ என்ற திகிலுடன் அடுத்த நாடகத்தை பார்க்கத் தயாராகி விடுகிறோம். ஆனால் நடித்தவர்களோ தம் உழைப்பிற்கு ஊதியம் பெற்றுக் கொண்டு வேறு வேலைக்குத் தயாராகி விடுகின்றனர். இது தான் உண்மை.

குடும்பப் பெண்கள் மட்டுமல்ல, வேலைக்குச் செல்லும் ஆண்கள் கூட வீடு வந்து சேர்ந்தவுடன் தொலைக்காட்சி முன் இருந்து விடுகிறார்கள். பெற்றோர்களுடன் சேர்ந்து குழந்தைகளும் இருக்கின்றனர். அல்லது தாம் நாடகங்களை பார்த்துக் கொண்டு குழந்தைகளை படி என்கின்றனர். மாலை நேரத்தில் குழந்தையின்

கல்வியில் உதவுவதை விட்டு நாடகங்களுடன் மல்லுக்கட்டுகின்றனர்.

அக்காவை கொல்ல நினைக்கும் தம்பி, அடுத்தவள் கணவருக்கு ஆசைப்படும் பெண், மனைவியின் தங்கைக்காக கொலை செய்ய எத்தனிக்கும் கணவன். மனைவியையும் வளர்ந்த பெண்ணையும் வீட்டில் வைத்துக் கொண்டு வீட்டில் உள்ள இன்னொரு பெண்ணுடன் சரசமாடும் கணவன். இவைகள் தான் நாடகங்களின் மையக்கருத் துக்கள். இந்த நாடகங்களில் சங்கடங்களில் இலகுவாக மாட்டிக் கொள்ளும் கதாநாயகிகள், இன்னொரு பெண்ணை தன் கணவனுக்கு மணமுடித்து வைத்து விட்டு வசனம் பேசும் கதாநாயகிகள் ஏராளம்.

ஓர் ஆணின் பார்வையில் சற்று வேறுபாடிருந்தாலே ஒதுங்கிப் போய் விட வேண்டும் ஓர் பெண். ஆனால் நாடகங்களில், அப்படிப்பட்ட ஆண்களின் கையால் தாலிகட்டிக் கொள்கிறார்கள் கதாநாயகிகள். அவர்கள் அப்படியானவர்கள் என்று தெரிந்தும்! அருவருத்து வருகின் றது பார்த்துக் கொண்டிருக்கும் போது.


நாடகத் தயாரிப்பாளர்கள் நாட்டில் நடப்பது தானே இது என்கின்றனர். பாமரன் வரை செல்வது இந்த தொலைக்காட்சி. இதற்கு இது தான் தீர்வு என்று உடனே முடிவு கட்டி விடுவர். ஏனெனில் எளிதில் உணர்ச்சிவசப்படுபவர்கள் நம்மக்கள். இப்போது எல்லாம் சிறுவர்கள் கூட கொலை, கடத்தல்கள் செய்கின்றனரே அதுவும் பாடசா லையில் கற்கும் சிறுவர். இது எதனால் வந்த பாதிப்பு? இவ்வாறான நாடகங்கள் இந்த மாதிரியான நிகழ்வுகளை அதிகரிக்கவே செய் கின்றன. இதுவே பெண்களை இலகுவாக சீண்டிப் பார்க்க வைக்கின்றது.

நடிகர்கள் பணத்துக்காக நடிக்க, அதே பணத்துக்காகவே தொலைக் காட்சியிலும் இவை ஒளிபரப்பப்படுகின்றன. மக்கள் தான் பணத்தையும் நேரத்தையும் கெடுத்து இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இப்போது மனைவியின் தங்கைக்காக மனைவியை கொலை

செய்யக் கூட ஆரம்பித்திருக்கின்றனர். பார்வையாளரான மக்களோ இப்படித்தான் அந்த நாடகத்திலும் நடந்தது என்று முடித்து விடுகின்றனர். எங்கே செல்கின்றது நம் கலாசாரம்? பண்பாடு?

அ. கலைநிலா





## விரித்தேன்....

நாற்சுவரிற்குள் பெண் என்றெனை
இருபது நூற்றாண்டுகளாய் அடிமைச் சிறை வைத்தாயோ?

அன்று அடுப்பங்கரையும் சமையற் கட்டுமே – உன்
சாதனையென்றெனக்கு உபதேசித்தவனல்லவா – நீ!

கம்பியூட்டர் தொடங்கி வான்வரை
என் சிறகுகள் விரிய விரிய...

நீ தந்த வேதனையிலும்
நான் புரிந்ததுதான் சாதனை

வேறெதுவும் நிகருண்டோ எமக்கு

இனி – எம்
விழுதுகள் வளரும்...............
சாதனைகள் தொடரும்.............

லெவனா டக்ளஸ்,

# கணவருக்காக .... கனதகளுக்காக....



பெண்ணுக்கு நடக்கும் கொடுமைகள், அடக்குமுறை அதிகார துஷ்பிரயோகம் இன்னும் பல தரப்பட்ட சித்திரவதைகள் யாவுமே அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயம்தான். மனைவியை இழந்தவன் உடனே (சிலநாட்களில்) புதுமாப்பிள்ளையாகிறான். எவன் தபுதாரன் ஆகிறான்...? ஆனால் பெண்..?

கணவனை இழந்தால், பிள்ளை பெறாவிட்டால் அத்தனை பழியும் பெண்ணின் தலையில்தான்.

**சம்பவம்:**

பெண் தொழில் புரிபவள். கணவரோ ஆசிரியர். ஆச்சாரமான ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இக்குடும்பத்தில் திருமணமாகி 7, 8 வருடங்களுக்குமேல் பிள்ளைகள் இல்லை. கணவனின் உறவுகள் உட்பட எல்லோருமே அப்பெண்ணை மதிப்பதில்லை கீழ்த்தரமான சொற்களால் தினம் தினம் சித்திரவதை செய்தனர். சுபகாரியங்கள், மற்றும் நல்ல நிகழ்வுகளில் அப்பெண்ணைப் பங்கெடுக்க விடுவதில்லை. தள்ளியே வைத்தனர். கேலிசெய்தல், அவமானப்படுத்தல் அடக்கு முறை, பழிவாங்குதல் போன்ற அனைத்துச் செயல்களால் அப் பெண்ணைக் கரித்துக் கொட்டினர். சொல்லம்புகளால் அப் பெண்ணின் மனதைத் துளைத்து எடுத்தனர் குறை யாரில் இருந்தது எனப் பார்க்கவில்லை. பழி முழுவதும் அப்பெண்ணிற்குத்தான். அவள் என்ன செய்வாள், அவளது பொறுமை, சகிப்புத் தன்மை இரண்டுமே மன உளைச்சலை ஏற்படுத்தியது. இனபந்துக்களின் கடுஞ்சொற்கள் அவளை நிலை குலையவைத்தது. நரம்பில்லாத நாக்கினால் எதையும் பேசலாம் ஆனால் அள்ளமுடியாது. அப்பெண்ணின் மனநிலையை சொந்தங்கள் புரிந்து கொள்ளவில்லை.

அவளது உயிரோடு கலந்துவிட்ட உணர்ச்சிகளைக் குழி தோண்டிப் புதைத்தவர்களிடம் தலையணை ஒன்றைக் கட்டிக் கொண்டு திரிந்த அவளின் நடிப்பு பாதுகாப்புப் படையினரின் சோதனைச் சாவடியில் வெளிப்பட்டதுமே அனைத்து ஊர்களுக்கும் காட்டுத் தீ போல் செய்தி பரவியது. சம்பவத்தின் பின் அப்பெண்

செய்தது பிழை என விமர்சனத்துக்குட்பட்ட அதே காலகட்டத்தில் விமர்சனங் களுக்குட்படாமல் ஓடியது இதே காட்சியையொத்த தொலைக்காட்சித் தொடர் (கணவருக்காக), சினிமா (எஜமான்).

தத்தெடுக்கப்போகும் குழந்தை தான் பெற்ற குழந்தை என்று சொந்தங்களுக்குக் காட்டவும் தனது மலடி என்ற பட்டத்தைத் துடைக்கவும் இக் கற்பனைத் தொடர்கள் அடி எடுத்துக் கொடுத்தி ருக்கலாம்.

பெண்ணின் சூழ்நிலை, உறவுகளின் சுடு சொற்கள், மலடி என்ற பட்டம் இந்தப் பழியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்ற ஒரு பெண்ணின் பரிதாப நிலை எம் கண் முன்னால் அண்மை யில் நிகழ்ந்தது.

இன்று அப்பெண்ணை மீண்டும் சமூகம் கேள்விக்குள்ளாக்கி விட்டது....

அப்பெண்ணின் தண்ட னைக்குப் பதில் கூற வேண்டியவர் களின் பட்டியலில் இருக்க வேண்டிய வர்கள் யார் யார்...?

- ரஞ்சிதமலர் குகதாசன் -

## சத்தியங்கள்

குமுதினி தங்கராஜா
மண்டூர்

செத்துப் போன சத்தியங்கள்
சேதமில்லாது
செயலிழந்து போவது போல
எரியும் சமூக நெருப்பில்
வேகும் புழுக்களாய்
பெண்ணினம்

பாவிகளின் கைபட்ட
தேசமிது
பாவமன்னிப்புக்கு
இடமேயில்லை.





செய்தது பிழை என விமர்சனத்துக்குட்பட்ட அதே காலகட்டத்தில் விமர்சனங் களுக்குட்படாமல் ஓடியது இதே காட்சியையொத்த தொலைக்காட்சித் தொடர் (கணவருக்காக), சினிமா (எஜமான்).

தத்தெடுக்கப்போகும் குழந்தை தான் பெற்ற குழந்தை என்று சொந்தங்களுக்குக் காட்டவும் தனது மலடி என்ற பட்டத்தைத் துடைக்கவும் இக் கற்பனைத் தொடர்கள் அடி எடுத்துக் கொடுத்தி ருக்கலாம்.

பெண்ணின் சூழ்நிலை, உறவுகளின் சுடு சொற்கள், மலடி என்ற பட்டம் இந்தப் பழியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்ற ஒரு பெண்ணின் பரிதாப நிலை எம் கண் முன்னால் அண்மை யில் நிகழ்ந்தது.

இன்று அப்பெண்ணை மீண்டும் சமூகம் கேள்விக்குள்ளாக்கி விட்டது....

அப்பெண்ணின் தண்ட னைக்குப் பதில் கூற வேண்டியவர் களின் பட்டியலில் இருக்க வேண்டிய வர்கள் யார் யார்...?


**- ரஞ்சிதமலர் குகதாசன் -**

## சத்தியங்கள்

குமுதினி தங்கராஜா
மண்டூர்

செத்துப் போன சத்தியங்கள்
சேதமில்லாது
செயலிழந்து போவது போல
எரியும் சமூக நெருப்பில்
வேகும் புழுக்களாய்
பெண்ணினம்

பாவிகளின் கைபட்ட
தேசமிது
பாவமன்னிப்புக்கு
இடமேயில்லை.





# தொலைக்காட்சித் தொடர்களும் சமூகத்தில் தொடரும் சீரழிவுகளும்

தற்போது தொலைக்காட்சியில் தொடராக ஒலிபரப்பப்பட்டு வரும் தொடர்கள் அனைத்தும் சிதம்பல்கள் என்று கூறுமளவிற்கு சீரழிவாகப் போய்க் கொண்டிருக்கிறது. இதைப் பார்ப்பவர்கள் மத்தியிலும் பெரும் சீரழிவுகளையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது இது மிகவும் வேதனைக்குரிய விடயமாக அதிகமானோர் புலனில் தெளிவாகிறது.

ஆரம்பம் ஏதோ - நன்றாகத்தான் இருக்கும் தொடர்கள் நகர்ந்து செல்கையில்தான் ஒரு பெண் பாத்திரத்தை இரக்கமற்றவளாக, பிடிவாதக் காரியாக, ஒரு இராட்சசியாக, கொலைகாரியாக, கொள்ளைக்காரியாக, சூட்சிக்காரியாக, சூனியக்காரியாகக் கொடியவளாக உலவ விடுகிறார்கள் இதுவே தற்போதைய தொடர்களின் நிலைமையாகப் போய்க் கொண்டிருக்கிறது.

**உதாரணத்திற்கு:**

முகூர்த்தம், கணவருக்காக, அண்ணாமலை, கல்கி, ஆனந்தம், நிம்மதி ஏற்கனவே ஒளிபரப்பப்பட்ட “சித்தி” போன்ற தொடர்களில் பெண்கள் எப்படிச் சித்தரித்துக் காட்டப்படுகிறார்கள் என்பது அதனைப் பார்க்கும் புத்தி ஜீவிகளுக்கு புரியும். அப்பெண் பாத்திரம் வரும் போதும் நிற்கும் போதும் நடக்கும் போதும் சிரிக்கும் போதும் பேயோ, புலியோ வருவது போல் பயங்கரமானதொரு பின்னனி இசையும் ஒலிபரப்பப்படும். அது எரிச்சலைத் தருகிறது.

அது மட்டுமல்ல அவர்கள் மூலம் பிடிக்காத ஒருவரை கடத்துவது எப்படி? கொலை செய்வது எப்படி? திருடுவது எப்படி என்று திட்டம் தீட்டுவதிலிருந்து செயல்படுவது வரை அழகாகச் சித்தரித்துக் காட்டப் படுகிறது, அதிலும் பார்க்க இன்னொரு முக்கியமான கேவலமானதொரு விடயம் அனைத்து தொடர்களிலும் கதையாக்கப்பட்டிருப்பது அதாவது நண்பியின், தங்கையின், அக்காவின் புருஷன்மார்களைத் தன் புருஷனாக் கிக் கொள்வது அல்லது அதற்காகச் சதிகள் பல செய்து அவன்

பின்னால் நாய் பேயாக அலைவது போன்ற கீழ்த்தரமான செய்கைகளில் ஈடுபடுவதாக கதையாக்கப்பட்டிருப்பதுவேயாகும்.

அடுத்தது பிள்ளைகள், தாய், தந்தையை எதிர்த்துப் பேசுவது பாடசாலைக்குக் கட் அடிப்பது, திருடுவது, பொய்பேசுவது போன்ற இதர கெட்ட பழக்கங்களைச் சுட்டிக் காட்டும் காட்சிகள் பவ்வியமாகக் காட்டப்படுகிறது. எனவே இதனைப் பார்க்கும் சிறுவர்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துவிடுகிறது. சரி எது தவறு எது என்று புரியாத வயதினர் இவைகளைக் கடைபிடித்துச் சீரழிகின்றனர்.

அடுத்தது நாத்தனார், மாமி, மருமகள் கொடுமை, சித்திமார், பெரியம்மாமார் கொடுமை இவ்வாறான கொடுமையான சம்பவங்களும் மிகவும் தீவிரமாக காட்சியமைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் யாவும் நிறுத்தப்பட, தவிர்க்கப்பட வேண்டும். ஏன் இந்த தயாரிப்பாளர்களுக்கு வாழ்வியல் சம்பந்தப்பட்ட நல்ல கதைகளே கிடைக்கவில்லையா?

இப்படியான நச்சுக்காய்களைத் தினமும் தின்று அவதிப்படு பவர்கள், பட்டவர்கள் எத்தனையோ பேர் உள்ளனர். இது தெரியுமா அந்தத் தயாரிப்பாளர்களுக்கு!

பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது. பெண்களின் வீட்டுவேலைகள் நின்று போகிறது இதனால் கணவன் மனைவியிடத்தில் பிரச்சனை எத்தனையோ கிராமப்புறத்துப் பெண்கள் இத்தொடர்களைப் பார்த்து அதற்கு அடிமையாகி முக்கியமான தேவைகளைக் கூட நிறைவேற்றாது புறக்கணித்துவிட்டு "*TV*" பார்ப்பது ஒன்றே வேலையென்று *TV* பார்ப்பது நமக்காக என்றில்லாது *TV* பார்ப்பதற்காகவே நாங்கள் என்ற கோதாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் எவ்வளவு இழப்புக்கள் என்பதனைப் புரிந்து கொள்கிறார்களில்லை. குடும்பத்தில் அன்பு அன்னியோன்யத்தையும் குறைத்து விடுகிறது இத்தொடர்கள்."

மேலே குறிப்பிடப்பட்ட பெண் பாத்திரங்களைப் பார்த்துக் கற்பனை செய்து ஆடம்பரமாகத் தானும் வாழ நிஜ வாழ்வில் எத்தனித்தல், நடத்தல், இதனால் அவர்களின் வாழ்வே தொலைந்து போகிறது. இப்படி எத்தனையோ பேர் தங்கள் வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக் கிறார்கள். உதாரணத்திற்கு உண்மையாக நடந்த சம்பவமொன்று.

மட்டக்களப்புப் பகுதியில் குழந்தையில்லாத ஒரு பெண் தான் கர்ப்பமாக இருப்பதாகப் பாவனை காட்டி வயிற்றில் தலையணையைக் கட்டி, இல்லாத ஒன்றை இருப்பதாக காட்டி நடித்த அந்நடிப்பே தன் வாழ்வுக்கு ஏன் உயிருக்கே எமனானது. இப் பெண்ணின் இந்நிலைக்குக் காரணம் அவள் வாழ்ந்த சூழலும், சமூகமும்தான். “கணவருக்காக” சீரியலில் கர்ப்பமாக இருக்கும் தன் நாத்தனாரை மறைத்து வைத்து விட்டு தான் கர்ப்பமாக இல்லாத நிலையிலும் கர்ப்பமாக இருப்பதாக நடித்து வந்த இந்த உமா என்னும் கதாபாத்திரம் ஊடாக கற்றுக் கொண்ட பாடமுமேயாகும். நிஜ வாழ்வில் செயல் படுத்த முனைந்த இப்பெண்ணின் வாழ்வு இப்போது கேள்விக்குறியாக.

அடுத்தது முன்னூறு பகுதித் தொடர்கள் இருநூற்றித்தொண்ணூறு பகுதிகள் கெட்ட செயல்களாகவும் காட்சியமைக்கப்படுகிறது. இறுதி பத்துப் பகுதி மாத்திரமே ஏதோ நன்மை பயக்கும் விதமாக அமைகிறது. அதனை உற்று நோக்குவோமானால் பார்ப்போர்களிடையே அந்த இருநூற்றித்தொண்ணூறு பகுதிக் காட்சிப் பார்வை மனதில் பதியுமா? இறுதிப் பத்துப் பகுதி மனதில் நிற்குமா? இது கேள்விக்குரிய விடயமாகிறது.

பாலில் நீரைக் கலந்து விட்டால் நீரை விடுத்து பாலை மட்டும் பருகுமாம் அன்னம். இதில் எத்தனை பேர் அன்னம்?

எனவே தொடர்கள் மக்கள் பார்த்து ரசிப்பதற்காகவும் வாழ்வை வாழ்வாக வாழும் வகையிலும் முழுக்க முழுக்க நல்ல விடயங்களைப் பார்ப்பவர்களுக்கு தரமான தொடர்களாக தயாரிப்பாளர்கள் தயாரித்து வழங்க வேண்டும். சீரியல்களாகத் தொடர்களாக ஒலிபரப்பும் தொலைக்காட்சி நிறுவனத்தினர்களும் இதனைக் கவனத்தில் கொண்டு செயல்படல் நன்மை பயக்கும்.

- யோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி -

# தொலைக்காட்சி தொடர் நாடகங்களில் பெண்கள்...

- படங்கள் -

யோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி









# ??? திரையினால் விலங்கிடப்பட்டது ???

பாவம் என்று சொல்லக் கூட
யாருமில்லை. ஆனால் பரிகசிக்க மட்டும்
பலர் இருந்தனர்.

உன் நிலைகுலைந்த நெஞ்சுக்குள் சுக்கு நூறாகிக்
கிடக்கும் துயரங்களின் தூவானங்களை
என்னால் எழுதுவதற்கு முடியவில்லைதான்
ஆனால் உனக்குள் எஞ்சியிருக்கின்ற
ரணம் மாத்திரம் என்னை தினம்
மரணமாக்குகின்றது. எழுத முடியவில்லை.

உனது சங்கடமான சங்கதிக்கு வழிவகுத்த
சமுதாயம் மட்டும் ஏனோ? மௌனப் பிடியில்
ஒன்றா? இரண்டா? அவலங்கள் இன்னும் தான் . . .

வாழ்க்கை என்ற வட்டத்துள் நீ நுழைய
முற்பட்ட போது
வளர விடவில்லையே . . .
சாதியெனும் பேதம்
மலடி என்ற பட்டம்.

மனிதர்களின் மத்தியில் நீ ஒரு மனுசியாய்க்
கூட தெரியவில்லை. மிதிபட்டாய் நொறுங்கியது
உன் மனசு. மலட்டு மனசுடன் அவர்கள்
பேசிப் பேசி உன் உணர்வுகள் பிடுங்கப்
பட்ட போது எவ்வாறு தாங்கிக்கொண்டாய்?
எப்படி சகித்துக் கொண்டாய்?

உனக்காக ஒரு சிறு ஒளி
ஏற்ற முற்பட்ட நீ
தள்ளிவிட்டதே . . . குற்றவாளியாய்
கூட்டுக்குள் பூட்டப்பட்டதென்ன நியாயம்...??

எப்போது கழற்றப்படும் உன் உணர்வுகளுக்கும்
உனக்கும் போடப்பட்ட விலங்குகள் ?
எத்தனையோ கேள்விக் குறிகள் ????
உன் கதையில் விடை வேண்டும்.
உன் நிலை எண்ணி வடிக்கின்ற
விழிகளுக்கு விடை வேண்டும்.

சிதாரா..
ஏறாவூர்

# நிஜமும் நிழலும்

## திரைகளுக்குள்ளிருந்து வரும் பூதம்




சினிமாவின் யதார்த்தம் வன்முறையை ஓர் பொதுத்தன்மை வாய்ந்த மனோபாவத்தில் ஏற்கப் பழக்குகின்றது. இந்தப் பின்னணியின் மூலாதாரம் சமூக அரசியல் பொருளாதார தளத்தின் பெண்ணின் மீதான அடிமைத்தன, அடக்குமுறை ரீதியான கருத்தியல்கள்தான் எனினும், கதாநாயக ஆதிக்கமிக்க - தமிழ்த் திரைப்படங்களில் கறிவேப்பிலை தரத்திற்கு பயன்படுத்தப்படும் பெண்கள் - நிஜவாழ்விலும் அத்தகைய பெண்களுக்கு நிகழும் வன்முறைகளுக்கும், அதே ஆதிக்க மனோ நிலைகளில் தான் தீர்வும் முன்வைக்கப்படுகின்றது என்பதையே நிஜவாழ்வின் பல்வேறு திக்குகளிலும் .நிகழும் சம்பவங்கள் காட்டி நிற்கின்றன. இக்கட்டுரைக் குறிப்பின் மூலம் குறிப்பிட்டுக் காட்ட விளைவது பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு கனவுத் தொழிற்சாலையாகவுள்ள சினிமாவும் சினிமா சார்ந்த நீட்சியான தொலைக்காட்சி தொடர்களின் தாக்கங்களும் எவ்வாறு துணை புரிகின்றது என்பதும் பற்றியதே.

ஏனெனில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு வலுவூட்டும் பல்வேறு காரணங்களும், கருத்தியல்களும், அரசியல், பொருளாதார சமூக ரீதியான சட்டதிட்டங்களும் ஏராளம் உள்ள நிலையில் ஓர் பொழுதுபோக்கு ஊடகமாக கண்டுபிடிக்கப்பட்ட "சினிமா"வும் கூட பெண்ணை நெருக்கடிக்குள் தள்ளும் தந்திரோபாயமாக வளர்த்தெடுக்கப்பட்டமை ஒரு ஆச்சரியத்தை தரும் விடயமே.

முன்னைய தரப்பட்ட இரு பத்திரிகை / சஞ்சிகை தூண்டல்களும், தரும் நிதர்சனமும், ஜப்பானின் 'சுப்பர்மென்'(Supperman) தொடரைப் பார்த்து மாடியிலிருந்து குதித்துத் தவறி வீழ்ந்து மரணமடைந்த சிறுவர்களும் இந்திய டெல்லிச் சூழலில் இதையொத்த

நிலையில் மரணமடைந்த சிறுவர்களும் தன்னைக் காதலிக்காத பெண்ணை கடத்தி வன்புணர்வு செய்வதும், கொலை செய்வதுமாக இளைஞர்களுக்கிடையே பரவியுள்ள மனோவிகாரமும் சமூகத்தின் சகல தரப்பினரையும் ஓர் மனவெழுச்சி நிலையில் தள்ளி - துலங்கச் செய்யும், வழிநடத்தல்களை மேற்கொள்ளும் திரை - சினிமா பின்னனிகள் - சமூகத்தின் இரண்டாம் சாதியினராகவே நோக்கப்படும் பெண்களை மேலும் அழுத்தவும், நெரிக்கவும் வேறு தேவைகள் / அவசியங்கள் ஏதும் இருக்க தேவையில்லை. பெண்கள் பெண்களாகவே இருப்பதால்.

'இம்சை அரசிகள்'(சன்) தொடர் சிரிப்பு தொடராம்! முதல் எபிசோடிலேயே தன்னை கூப்பிடாத திருமண நிச்சயதார்த்தத்துக்கு மங்களகரமாகச் சென்ற மனோரமா, பையனையும் பெண்ணையும் பற்றி கன்னா பின்னாவென்று சொல்லி, நிச்சயதார்த்தத்தை நிறுத்திவிட்டு பெருமைப்படும் காட்சியைப் பார்க்கவே பகீரென்கிறது. அடுத்த எபிசோடில் நிறைமாத கர்ப்பிணி என்பது தெரியாமல்(?) ஒரு பெண்ணுக்கு பாலாஜி உடலை குறைக்கிற பெல்ட்டைமாட்டி கர்ப்பத்தை கலைப்பது போன்ற காட்சி...

படு அபத்தமான இந்தக் காட்சிகளில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறதென்றே தெரியவில்லை. அடுத்தவர் குடியைக் கெடுப்பதாகக் காட்டுவதும், கர்ப்பத்தைக் கலைப்பதாகக் காட்டுவதும் சிரிப்பாகுமா? இன்னும் எதையெல்லாம் சிரிப்பென்று காட்டப் போகின்றார்களோ... கடவுளே என்று கவளைப்படுகிறார் தஞ்சாவூரில் இருந்து கௌசல்யா.

நன்றி–
"அவள் விகடன்"

**சம்பவம்**

தொலைக்காட்சித் தொடர் :- கணவருக்காக


பெண்மை உற்பத்தி வளச் சக்தியானது "கணவருக்காக" என வகுத்தொகுக்கப்பட்டதும், அதனது சொத்துடைமையாவதும் ஆண் வயமான அதிகாரத்தை பரீட்சித்துப்பார்க்கும் களமாகவும் அதேவேளை பெண்கள் சார்ந்ததாக வெளிப்படும்போது அது ஒழுக்கத்

திற்குரிய குறிகாட்டியாகவும் வழிநடத்தப்படும் கருத்தியல் எண்ணக் கருக்கள், மரபு ரீதியாக காலம்காலமாக உள்ள விடயங்கள் தான் எனினும்,

வீட்டிலிருக்கும் பெண்ணை கவனத்தில் எடுத்து பெருந் தொகையான முதலீட்டில் தயாரிக்கப்படும் நாடகங்கள் சாதித்துள் ளவை எவை? அடையப்பட்ட இலாபம் என்ன? போன்ற வினாக்களை நாம் தொகுத்துப் பார்த்தால், நடைமுறையில், சாதாரண பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் அதிகரித்துள்ளமையையே காட்டு கின்றன. எரியும் நெருப்பில் எண்ணெய் வார்க்கும் இத்தகைய தவிர்க்க இயலாததாகிவிட்ட நிகழ்வுகள் எதிர்காலத்தில் உருவாக்க நினைப்பது என்ன? என்பது புரியவில்லை ஆனால் நடைமுறை நிஜத்தில் இதன் தாக்கங்கள் எத்தனை தூரம் பாதித்துள்ளது என்பதை உதாரணங் களுடன்,

**சம்பவம் - 1 (கணவருக்காக) நாடகம்**

**கதையில் :-** கணவருக்காக தொடரில் அக்கா வாழ்க்கைப்பட்ட இடத்தில் தங்கையும் வாழ்க்கைப்படுகிறாள். இளைய சகோதரியின் கணவனின் தங்கை முறையற்று கர்ப்பம் தரிக்க, அதனை மறைத்து குடும்ப கௌரவத்தைக் காப்பாற்ற, தான் பொய்க்கர்ப்பம் ஒன்றை சுமந்து (துணிமூட்டை) மைத்துணியை காப்பாற்றுவதாக போகிறது நாடகத் தில்...



**நிஜத்தில் :-**

ஒரு அரசாங்க நிறுவனத்தில் நகரின் மத்தியப்பகுதியில் இராணுவச் சோதனைச் சாவடிகைக்குள் அமைந் திருக்கும் நிறுவனம் ஒன்றில் எழுது வினைஞராக கடமை புரியும் பெண். திருமணமாகி ஆறு வருடங்கள். பிள்ளைகள் இல்லை. பிரச்சினை பண்ணத் தெரியாத கணவன். மாமியா ரின் நீண்ட நாள் நெருக்கடி குழந்தை

கள் இல்லை என்பதும், சாதீய ரீதியில் பிள்ளைகள் அற்ற வர்கள் சடங்கு சம்பிரதாயங்கள் என்ப வற்றில் பங்கு வகிக்க முடியாது என்ப தும், குடும்பம் இதனால் தள்ளி வைக் கப்படும் என்பதும் தான் பிரச்சினைக் குரிய மூலம். மாமியின் தீர்மானம் மறுதிருமணம்.

இதனால் மனமுடைந்த பெண் மகப்பேற்று மருத்துவத்துவரின் துணையுடன் குழந்தையொன்றை தத்தெடுக்க விரும்புகிறார். ஆனால் இது தன் குழந்தை அல்ல என்பதும் தான் மலடி என்பதும், இதனால் தன் சமூகத்தில் தான் ஒதுக்கப்பட நேர்வதை தவிர்ப்ப தற்காகவும் தத்தெடுக்கவிருக்கும் குழந்தை தன் குழந்தை என்பதை நிரூபிக்கவும் நடிக்கத் தொடங்குகிறாள். எப்படி?

கணவருக்காக தொடரில் வரும், பொய்க்கர்ப்பிணி பாத்திரம் ஏற்று, 10 மாதங்களின் பின், தான் தத்தெடுக்க விருக்கும் குழந்தைக்கும், சுமக்கும் துணிமூட்டை குழந்தைக்கும் - சம

*"சொர்க்கம் (சன்) சீரியலில் மருமகள் சாரதா, மாமியாரிடம் தான் கர்ப்பமாக இருப்பதாகக் கூறுகிறாள். உடனே மாமியார் கோபம் மேலிட, 'இப்போதைக்கு குழந்தை வேண்டாம்' என்கிறாள். அதற்கான காரணமாக அவள் சொல்வதுதான் வியப்பான விஷயம். 'என் மகன் முன்பெல்லாம் அம்மா, அம்மா என்று என்னையே சுற்றி வந்தான். திருமணமானதும், 'சாரதா, சாரதா' என்று உன்னைக் கூப்பிடுகிறான். இன்னும் குழந்தை வேறு பிறந்து விட்டால், 'என் மகன் சாப்பிட்டானா, தூங்கினானா? என்றுதான் கேட்பான். என்னை அடியோடு மறந்துவிடுவான். அப்புறம் நான் எங்கேபோய் சாவேன்' என்கிறாள். அகில உலக அளவில் எங்குமே காணமுடியாத இப்படிப்பட்ட மாமியார்களை இந்த சீரியல்காரர்கள் எங்கிருந்துதான் பிடிக்கிறார்களோ.. தெரிய வில்லை!' என்று அலுத்துக்கொள்கிறார் திருச்சியில் இருந்து*

**எஸ். விஜயா சீனிவாசன்.**

**நன்றி–**
**"அவள் விகடன்"**

காலத்தை வெளிப்படுத்தி காலம் நகர்கிறது.

**சம்பவம் - 2**

இலங்கை ராணுவ தலைமையக மருத்துவமனையின் வாயிலில் குண்டு வெடிக்கிறது. பிரதான பாதுகாப்புத் தளபதி ஒருவரை இலக்கு வைத்து தாக்குதல் நடாத்தப்படுகின்றது. கர்ப்பிணி (அவ்வாறு தோற்றமளித்த) போராளியின் தற்கொலைத் தாக்குதல். கர்ப்பிணிபெண் போல் வேடமிட்டு Clinic ற்கு தொடர்ந்து அம் மருத்துவமனைக்கு சென்று தனது பாத்திரத்தை உறுதி செய்துள்ளார். தாக்குதலுக்கு வந்த பெண்போராளி.

**சம்பவம்**

1+2=

நிஜத்தின் வலியும், வலிக்கான ஆறுதல்களும் வெவ்வேறான வைதான். ஆயினும், சாதாரண மனிதர்கள், அத்தகைய வலிகளுக் குள் தள்ளப்படும் 'நிர்ப்பந்தங்கள்' மனிதர்களால், திட்டமிட்டே உருவாக்கப்படுகின்றது.

தனது குழந்தை பிள்ளைகள் மீதான அவா, குடும்பத்தில் அதனால் எழும், நெருக்கடி, ஈடுகொடுக்க கையாளும் தந்திரோ பாயம், எவ்வாறு மேலும், நெருக்கடியொன்றினுள் தள்ளுகின்றது என்பது மேற்குறிப்பிட்ட பெண்ணுக்கு நேர்ந்த பரிதாபத்தை, அவலத்தை பார்க்கும் போது, விளங்கும்.

குழந்தை தத்தெடுப்பதற்கு மிகக் குறுகிய காலமே உள்ள நிலையில் சம்பவம் 2 ஐப் போன்ற பாதுகாப்பு சூழலின் நெருக் கடியில், கர்ப்பிணி வேடமிட்ட பெண் இராணுவச் சோதனைச் சாவடியில் மாட்டிக் கொள்கிறாள். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப் படுகின்றாள்.

தனித்துள்ள குடும்பமும் விடுதலை செய்வதற்கான வழிகள் இன்றி கலங்கி நிற்கின்றது. பயங்கரவாத முடிச்சுக்குள் கட்டப்பட்ட கர்ப்பத்தை இலகுவில் இலங்கையில் அவிழ்க்க முடியாது என பல பெண்கள் நிறுவனங்களும் கைவிரித்துள்ளன.

நிஜத்தில் குழந்தைச் செல்வத்திற்காக ஏங்கும் ஒரு

பெண்ணை சட்டம், அந்த மனநிலையின் வலிகடந்து உணர்வுகளின் தாக்கத்தை உணராது கைது செய்து சிறையிலிட்டுள்ளது. மரபும், சடங்கும், சம்பிரதாயங்களும் தங்களைப் போலவே, வேலிக்குள் நிற்கின்றன.

உளநல மருத்துவரின் அறிக்கையொன்றை வேண்டுகிறது. விடுதலைக்காக, அப்பெண் உளநலரீதியில் ஆரோக்கியமற்றிருந்த தால்தான், இவ்வாறு கர்ப்பிணி வேடமிட்டுள்ளார். அதனால் இவர் சித்த சுவாதீனமற்றவர் என்பதை மருத்துவம் உறுதிசெய்ய வேண்டி நிற்கிறது.

கணவருக்காக நாடகத்தின் - பாத்திரங்கள் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டுள்ளது. குடும்பத்தின் கௌரவத்திற்காக 'பொய்' சொன்ன மருமகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளாள். அவளின் தியாகம் மெச்சப்படுகிறது. அது பெண்மைக்குரிய சிறந்த இலக்கணமாக காட்டப்படுகிறது. ஆனால் இத்தகைய உந்தல்களின், ஊக்குவித் தல்களின் பின்னணியில், களமிறங்கும் நிஜப்பெண் சட்டம், சமூகம், குடும்பம் போன்றவற்றால் நிராகரிக்கப்படுகிறாள்.

எனவே, நமது நேரம், உழைப்பு, சிந்தனை, யதார்த்தம், இவைகளை செலவிட்டு புறந்தள்ளி நாம் ரசித்துப் பார்க்கும் நாடகங்கள் நமக்கு சொல்வது எதனை? நாம் அடைந்த பயன்கள் எவை? பொழுது போக்குகள் எனும் போர்வையில், மிகுந்த சவால்களுக்கு மத்தியில் பெற்றுள்ள 'சாதாரண பெண்ணின் வாழ்வை' - நரகத்தில் தள்ளவே தயாரிக்கப்படுகின்றாதா? பெண்க ளைப் பெண்களுக்கே எதிரியாக்கும் நாடகங்களின் வருகைக்கு - நமது ஆதரவும், ரசனையும் தொடரப்போகின்றதா?

கல்பனா சாவ்லாவும், நம்மூர்க் கற்பனாக்களும் ஏன் இவ்வாறு இடைவெளிப்பட்டுக் கிடக்கின்றனர்?

**சம்பவம் – 3**
**இடம் - களுவாஞ்சிகுடி**
**வயது - 5 வயது (ஆண்)**

படு சுட்டிப்பையன், வயதுக்கும் மீறிய முதிர்ச்சி, மொழிவளம் விழுப்பமானது, பழைய சிவாஜிபடங்கள், இன்னும் விருப்பமானது,

நகைச்சுவை நடிகர்களின் இறுவட்டுக்கள், திடீர் ரசனையாக மாறியது - பறந்து பறந்து நடிக்கும் நடிகர்களின் சண்டைக் காட்சிகள். விளைவு தன்னைவிட இருமடங்கு உயரமான துணி உலர்த்தும் கொடியில், தனது வீரத்தை பிரதாபிக்கும் முகமாக பாய்கிறார். நைலோன் கயிறு கழுத்தை வெட்டி, அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பியுள்ளான் சிறுவன். ஏன் இப்படிச் செய்தீர்? என்றபோது, விஜய் மாதிரிப் பறந்து பார்த்தேன் கொஞ்சம் கயிறு எட்டவில்லை. மிஸ்ஸாகிவிட்டது என்று சிரிக்கிறான். நிஜத்திற்கும், நிழலிற்கும் வேறுபாடு புரியாத அச்சிறு கன்று.

இவைகளுக்கு அப்பால், நாட்டின் சாதாரண சூழலில் இடம் பெறும் இடப்பெயர்வுகள், பெண்ணை பௌதீக ரீதியில் இன்னும் நெருக்கடியில் தள்ளுகின்றன. பொதுவான பிரச்சினைகள் அனைத் தும், பல கிளைவிட்டு பிரத்தியேகமாக பெண்களைத் தாக்குகின்றன. பாதுகாப்பற்ற ஒரு "குருட்டுச் சூழலில்," நாம் விழித்தபடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதால், பெண்களுக்கான வன்முறைகள் - மிகுந்த நுட்பமாக கூர்மையடைந்துள்ளன.

பாரம்பரிய, மரபு ரீதியான மாமியார் கொடுமைகள், சீதனம், ஒழுக்கம் போன்றன நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகை நவீன வன்முறை வெளிப்பாடுகளில், தொலைக்காட்சித் தொடர்கள் மூலம் உருவாக்கப்படும் பெண்களால் கலாசாரங்களை பெறுவதற்கும் அதனை, எனக்கே உரியதான மிக இயல்பான பண்பாடாக நாம் சுரணையற்று ஏற்கப் பழகியிருப்பதும், தொடர்ந்து அத்தகையவற்றை அனுமதித்திருப்பதும் என... எம்முள் பலம்பெறும், எமக்கெதிரானவற்றைப் பற்றி நாம் சிந்திக்கவும் ஆன ஓர் அறிமுகக் குறிப்பாகவே, இது தரப்படுகின்றது.

எனவே இத் தெடர்களின் தொடர்ச்சி யாரிடமுள்ளது? நாம் இதன் ஆயுளை நீடிக்கப் போகின்றோமா என்பதும் நம்மிடமே உள்ளது.

**இன்னும் வரும்...** T. உருத்ரா.

# பெண்களுக்கெதிரான
# வன்முறையின் சமூகவெளிப்பாடுகள்

I) அறிமுகம்

பெண்களுக்கெதிரான வன்முறையின் சமூக வெளிப்பாடுகள் தொடர்பான கேள்விகளின் பகுதிகளை எடுத்துக் கூற வேண்டியுள்ளமை இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. அத்தகைய சம்பவங்களை பொது இடங்களில் காணப்படும் வாய்மொழி தொடக்கம் தனியார் சமுதாயப் படிநிலையில் காணப்படும் வீட்டு வன்முறை, மற்றும், பாலியல் பலாத்காரம் என வரிசைப்படுத்தி செல்லலாம். இதன் விளைவுகளாக உளவியல் ரீதியான அழுத்தம் அல்லது மனஅதிர்ச்சி என ஒரு பக்கமாகவும் உடல் ரீதியான பலவீனம், மரணம் என மறுபக்கத்திலும் ஏற்படுத்தப்படலாம். எமது சமுதாய அமைப்பினை பொறுத்தவரை ஆணாதிக்கம் என்ற கருத்தும் சமுதாய விழுமியங்களில் முதலிடத்தை வகிப்பதால், பெண்களுக்கெதிரான வன்முறையினை உற்றுநோக்கும்பொழுது பெண் என்பவளே கெட்ட நடத்தை உடையவள் எனவும், அவளது துர்நடத்தையே வன்முறைக்கு ஆளாவதற்குக் காரணம் என்ற கலாச்சாரப் பாங்கும் எமது சமூக அமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இக்கட்டுரையானது பெண்களுக்கெதிரான வன்முறையின் சமூக வெளிப்பாடுகள் அத்தகைய வன்முறையின் உடனடி விளைவுகளின் மீது கருத்தூன்றி ஆராயப்படவில்லை. அச்சுறுத்தலுக்கும் வன்முறைக்கும் உள்ளாகாது சுதந்திரமாக வாழ்வதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு என்ற அடிப்படை மனித உரிமையை அனுமானமாகக் கொண்டே இக்கட்டுரையானது ஆராய்கிறது.

II) **பெண்களுக்கெதிரான வன்முறையின் சமூக வெளிப்பாடுக ளின் வகைகள்.**

பெண்களுக்கெதிரான வன்முறையின் சமூகவெளிப்பாடுகளை பரந்த அடிப்படையில் மூன்று வகைகளாக பிரிக்கலாம்.

1) **அத்தகைய வன்முறையின் வெளிப்பாடுகள் பாதிக்கப்பட்ட திறத்தவரின் சமூக உறவுகளின் அடிப்படையில்.**

2) **அத்தகைய வன்முறையின் வெளிப்பாடுகள் குற்றம் புரிபவரின் சமூக உறவுகளின் அடிப்படையில்,**

3) **அத்தகைய வன்முறையின் வெளிப்பாடுகள் சமூக ஒழுங்கமைப்பின் அடிப்படையில்**

என வகைப்படுத்தலாம். கீழ்க் கண்டவாறு பெண்களுக்கெதிரான வன்முறையின் சமூக வெளிப்பாடுகளின் சில முதனிலையான சிறப்பம்சங்களை சுருக்கமாக கூறுகின்றேன்

* **பாதிக்கப்பட்டவரின் சமூக உறவுகளின் மீதான பெண்களுக் கெதிரான வன்முறையின் சமூக வெளிப்பாடுகள்.**

பெண்களுக்கெதிரான வன்முறையின் வகைகளும் தன்மையு மானது ஏற்கனவே மேலே குறிப்பிட்டதை போன்று, பல்வேறு வகையிலும் வீட்டிலும் குடும்பங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் (பாதைகளில், பஸ்வண்டியினுள், வேலைத் தளங்களினுள்) நடைபெற்றுவருகின்றன. இத்தகைய பெண்களுக் கெதிரான வன்முறையின் பிரதான விளைவாக பெண் என்பவள் சமூகப் பார்வையில் பாதிக்கப்படுவராகவும், ஏனையவர்களால் குறிவைத்து தாக்கப்படுபவளாகவும் கருதப்படுகிறாள். எனவே இத்தகைய வன்முறையில் பெண்கள் அடங்கிப் போகின்ற வர்களாகவும் ஆண்கள் வலிந்து சென்று தாக்குபவர்களாகவும்

காட்டப்படுகின்ற ஒரு கருத்துப்பாங்கு எமது அமைப்பில் உள் வாங்கப்பட்டுள்ளது. இவ்வாறான வன்முறைக்கு உள்ளாக்கப்படும் பெண் உளவியல் ரீதியான பாதிப்பிற்கும் உடல் ரீதியான, துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்படுகிறாள். மேலும் வன் முறையை எதிர்க்கும்போது அவமதிக்கப்படுவதுடன் மேலும் வன்முறையால் பாதிக்கப்படுகின்றாள்.

சமூக வழக்காறுகளினதும் பழக்கவழக்கங்களினதும் விழுமியங்களை பொறுத்தவரை ஆண், பெண், என்ற இருபாலரி னதும் நிலைகளை கருத்தியல் கட்டமைப்பில் வரையறுத் துள்ளவாறு பார்க்கும் போது பெண்களின் வாழ்க்கையே அத்த கைய வன்முறையை பெற்றுக்கொள்வதாகக் காட்டுகின்றது. இத்தகைய விளைவானது, அவளது முழு வாழ்வினதும் ஒவ்வொரு கட்டத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. வன்முறையால் பாதிக்கப்பட்டவள் என்ற முறையில் பெண்ணுக்கும் அவளது குடும்பத்திற்கும் இடையிலான தொடர்பும், அவளது பிள்ளைக ளுக்கும் இடையிலான தொடர்பு அவள் வேலை செய்யும் இடத்தில் இருப்பவர்களுக்கு இடையிலான தொடர்பு, ஏனைய பெண்களுக்கு இடையிலான தொடர்பு என அனைத்துப் பார்வையிலும் அவள் எதிர் மறையாக மாற்றப்பட வேண்டியவளாக காணப்படுகின்றாள்.

**வன்முறையை புரிபவரின் சமூக உறவுகளின் அடிப்படையில் பெண்களுக்கெதிரான வன்முறையின் சமூக வெளிப்பாடுகள்.** பெண்களுக்கெதிரான வன்முறையில், அச்செயலை புரிபவரின் ஈடுபாடும் அவர் மேற்கொள்ளும் விதமும் தீவிரமான சமூக விளைவினை ஏற்படுத்தியுள்ளமை முக்கியமாக குறிப்பிடவேண்டிய தொன்றாகும். உதாரணமாக பெண்களுக்கெதிரான வன்முறையின் சம்பவங்களை ஆராய்ந்து பார்க்கையில் அதனைப் புரிபவர்களான ஆண்களுக்கும் பாதிக்கப்படுபவர்களுக்கும் இடையில் காம நெருக்கமான உறவானது மனைவியாக, தாயாக அல்லது மகளாக அமைந்து காணப்படுவதை எடுத்துக்காட்டுவதை அவதானிக்கலாம்.

பத்திரிகையில் வெளிவருகின்ற பெண்களுக்கெதிரான வன்முறையின் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வின்படி வீடுகளில், ஏற்படும் பெண்களின் அதிகப்படியான மரணங்கள் கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான வீட்டு வன்முறையின் மூலமே ஏற்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆண் ஆக்கிரமிப்பாளர் என்ற கருத்துப்படிவத்தினை பொறுத்தவரை பொதுவெளிகளிலும் சரி, வீட்டினுள்ளும் சரி ஆணாதிக்கம் என்றகலாச்சாரத்தை அடிப்படையாக கொண்ட சமூக அமைப்பே உடலியல்ரீதியாக வளர்ந்து வந்துள்ளது. பெண்களுடன் ஒப்பிடுகையில் ஆண்கள் அதிக வலிமை பொருந்தியவர்களாகவும் பாலியல் ரீதியாகவும் திறமை உள்ளவர்களாகவும் கருதப்படுவதால் பெண்களின் மீது அடக்கு முறையினை பாவிப்பதற்கு தங்களிற்கு உரிமையுண்டு என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றார். இத்தகைய புரிந்து கொள்ளல்கள் வழக்கத்திற்கு மாறான வகையில் யதார்த்தத்துடன் பிணைக்கப்பட்டுள்ளதாக பெண்களுக்கெதிரான வன்முறை என்பதும் இயற்கையான ஒரு சொல் என்றவாறு ஆணா திக்க சமூகத்தால் உணர்ந்து கொள்ளப்படுகின்றது.

3) **சமூக ஒழுங்கமைப்பின் அடிப்படையில் காணப்படும் பெண்களுக் கெதிரான வன்முறையின் வெளிப்பாடுகள்.** வன்முறையை தோற்று விப்பவர்களும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களும் வாழ்கின்ற சமூகத்தில் பெண்களுக்கெதிரான வன்முறையானது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அயலவர்கள், சமயத் தலைவர்கள், சுகாதார ஊழியர்கள், அரசியல் தலைவர்கள், பொலிஸ் உத்தி யோகத்தர்கள் மற்றும் ஏனைய நிறுவனத்தினை சேர்ந்த ஊழியர்கள் என பல இன மத குழுக்களையும் சேர்ந்தவர்களை இச்சமூகமானது ஒன்றிணைக்கின்றது. இத்தகைய குடும்பங்களில் வாழும் சிறுவர்களே அவர்களது குடும்பங்களில் நடைபெறும் வன்முறைகளை வெளிப்படுத்துபவர்களாகவும் அதேபோல் இவ்வன்முறையால்

பாதிக்கப்பட்டவர்களின் மீதும் சமூகமானது ஒரு shigna திணித்துள்ளதை காணலாம்.

மேற்கூறிய கலந்துரையாடலானது பெண்களுக்கெதிரான வன்முறையின் சமூக வெளிப்பாடுகள் சமுகத்தின் பல மட்டங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தி இருப்பதை வெளிக்காட்டி நிற்கின்றது. இந்நாட்டில் கடந்த மூன்று தசாப்த காலமாக குற்றங்களினதும் வன்முறைகளினதும் வீதங்கள் அதிகரித்து காணப்படும் அதே வேளை பெண்களுக்கெதிரான வன்முறையினை இல்லாதொழிப்பதற்காக கூட்டங்களை நிறுவனமயமாக்குகின்ற முயற்சிகளும் எடுக்கப்படுகின்றது. அரச மட்டங்களை பொறுத்தவரை பாலியல் துன்புறுத்தல் ஒரு குற்றமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் பாலியல் பலாத்காரம் ஒரு குற்றமாகவும் 20 வருடங்களுக்கு குறையாது தண்டிக்கப்படக் கூடியதாகவும் காணப்படுகின்றது. வீட்டுவன்முறை தொடர்பிலும் ஒரு சிவில் குற்றமாக அடையாளங் காணப்பட்டுள்ளது.

மேற் கூறிய விளைவுகளானது பல வருடங்களாக பெண்களின் உரிமைக்காக போராடுகின்ற நிறுவனங்களிலும் சட்டத்தரணிகள் பெண்களின் நலன் சார் குழுக்களினதும் பரப்புரைகளினதும் முயற்சிகளினதும் முடிவுகளாக அமைந்துள்ளது. எனினும் மேலும் சில பிரிவுகளான ஆகாரம், கல்வி போன்றவற்றிலும் இவ் அமைப்புக்களின் தலையீடும் முயற்சியும் தேவைப்படுவதுடன் அதேபோல் சமூக அரசியல் செயற்பாடுகளில் சமூக அணி திரட்டல்களின் மூலமே பெண்களுக்கெதிரான வன்முறை பெண்களின் மனித உரிமை மீறல்களாக சமூகத்தில் அடையாளங் காணப்படும்.

நன்றி : *Options*
*Obtions*

ஆங்கிலத்தில் – சேபாலி கொட்டேகொட
தமிழில் – செல்வி. பாத்திமாஜிதா

# சாம்பல் விதைப்புகள்




*- நாடகம் -*

மணி கடைக்குச் செல்கிறாள்

(வழியில்..)

மணி: (மனதிற்குள்) நம்ம ஊர் றிப்போட்டர் வாறா

மணி : என்ன செல்லாச்சி ஒரு மாதிரியா இருக்கிறீங்க

செல்லம்: என்னத்த சொல்ற ..கிட்டவா..(ரகசியமாக)நம்மட ஊருக்கு சனியன் பிடிச்சுத்து மணி..

(செல்லாச்சி ரகசியமாய் மணியின் காதில் கதைத்தல்)

மணி: உண்மையா செல்லாச்சி..கொஞ்ச சாமானும் வீட்டில இல்ல..என்ன செய்யப் போறனோ தெரியல்ல..

செல்லா: உண்ட புருசனுக்கு இரவு நிலம விளங்கியிருக்கும் தானே..

மணி: ஓம்..ஓம் இடிவிழுந்தாலும் அசையாத மனுசன் இரவு ஆடித்தார்

செல்ல: சரி..சரி நான் கடைக்குப் போறன் ..நீயும் வாறியோ..

மணி: வாங்களன்..போவம்..

(கடையில்)
மணி: 2 கட்டி சன்லைற்..,சீனி அர கிலோ..தேங்காண்ண கா போத்தல்..

கடைக்காரர்: சவற்காரம் தர ஏலாது..

மணி: ஏன் ..

கடைக்: நேற்றுச் சாமான் லொறி வரல்லையாம்..

மணி : ம்..(மனதிற்குள்)..ஒரு நாளைக்குள்ள சாமான் முடிஞ்சா என்ன..(சந்தேகத்துடன் போகின்றாள்)

(வீட்டில்)
கணவன்: என்ன நடக்குமோ தெரியல்ல..ஊர் நிலமை நல்லால்ல

மணி: அரிசி..தேங்கா..தேங்காண்ண...லாம்பெண்ண ஒண்டும் இல்ல காசுதாங்க..இப்ப போனாத்தான் வாங்கலாம்..பிறகு போனா எல்லாம் பதுக்குப் பட்டிரும்..

கணவன்: என்னட்டெண்டா.. காசில்ல என்னயாவது செய்.. (திரும்பி நின்று பக்கற்றுக்குள் இருப்பதை எண்ணி வைக்கின்றான்)

மணி: என்ன இரவைக்கு போடக்கணக்கா இருக்கா..? இடி விழுந்தாலும் திருந்தாத ஜென்மங்கள்.. எல்லாம் நாம குடுத்த இடம்..கடக் கொப்பிய கொண்டுபோய்ப் பாப்பம்..



படம்: நன்றி - Tamilnet

மணி: கடக் கொப்பி எங்க பிள்ள..இந்தாகிடக்காக்கும்.. (எடுத்தபடி)
மகள்..தம்பி எழும்பினா ரீயுசனுக்குப் போகாம வீட்டில இருந்து ரிவி பாக்கச் சொல்லு..

மகள்: ம்..ம்..காலம்.., எல்லாம் தலைகீழ் தானே..

கடையில்
(மணி கொப்பியை நீட்டியபடி..)

மணி : அண்ண.. ,..வெங்காயம் 100கிறாம்..தேங்கா ரெண்டு..ஒரு கொத்து..

கடக்: தங்கச்சி கடனுக்கு இனிச் சாமான் தர ஏலாது..காசு தந்தாத்தான் எதுவும் தரலாம்..இருந்த சாமானத்தான் விக்கன்..இன்டைக்கு சாமான் ஒண்டும் வரவும் இல்ல போகவும் இல்ல..

மணி: கடவுளே..,சரி அண்ண..ஒரு கொத்து அரிசி எண்டாலும் தாங்க..

கடக்: இது மட்டும்தான் கடன் அதுவும் இப்ப மட்டும் தான்..ஒரு கொத்தரிசி..(இழுத்தபடி தனக்குள் நான் போடுறதுதானே வில)

மணி: (கொப்பியையும் வேக்கையும் (bag) நீட்டியபடி..) அரிசிய கொண்டு போய் என்னத்தோட ஆக்கிக் குடுக்கப் போறனோ…தெரியலியே

கோமளம்: மணி, நான் காசு கொடுக்கன் நீ பின்ன மிச்ச சாமான வேண்டு..பிறகு காசத்தாவன்..
(இருவரும் செல்கின்றனர்)

வீட்டில்

மணி: மாமி இனி எப்படித்தான் காலம் தள்ளப் போறமோ தெரியல்ல.. அங்காலயும் போக ஏலாதாம்.. இஞ்சாலயும் போக ஏலாதாம்..தோட்டத்தில போட்ட காய் கறிகள எப்படிக் கொண்டுபோய் விக்கிற எண்டு தெரியல்ல மாமி..
(திடிரென ஊரின் பல பாகங்களிலும் எறிகணை கள் வெடிக்கின்றது. தெருவில் மக்களின் அவலக் குரல்களும் ஓடும் இரச்சல்களும் கேட்கிறது. ஊரை விட்டு மக்கள் பதற்றத்துடன் ஓடுகின்றார்)
சத்தம்வெளியில்:(ஒரே நேரத்தில்)..அம்மா கெதியா ஓடிவா, அண்ணனக் கூப்பிடு.. தம்பி நில்லு இவரக் காணல்ல. இஞ்சால வாக்கா.. கெதியா வாங்களன்
(மணியும் குடும்பத்துடன் வீட்டை விட்டு வெளியேறல்..)
(வீட்டை கவலையுடன் பார்த்தபடி..)

செல்லாச்சி: ஐயோ.. நம்மட ஊரே உடஞ்சு இப்படி ஓடுதே..

மணி: ஐயோ வயது போன மாமியோட இந்தப் பிள்ளைகளோட.இந்தச் சாமான்களோட.. எப்பிடி யப்பா போகப் போறன்..
(அனைவரும் நடந்து ஒரு இடத்திற்கு வந்து சேரல்)



படம்: தமிழ்நெட்

செல்லாச்சி: பிள்ள மணி, இப்ப மால மங்குது கொஞ்ச நேரத்தால நல்லா இருட்டிரும் எங்காவது இஞ்ச ஒரு இடத்திலை தங்கித்து விடிஞ்ச பிறகு போவம் பிள்ள..

மணி: சரி ஆச்சி..
(தேவகி அழுதபடி இருக்கிறாள்..)

தேவகி: மச்சாள் இவர் வேலைக்குப் போனவர் இப்ப எங்கெண்டு தெரியல்லயே ...

மணி: குழறாத மச்சாள்.. விடிஞ்சபிறகு எல்லாரும் ஒண்டாச் சேருவம் அப்ப எல்லாம் விளங்கத்தானே போகுது....விடியட்டும்..

கோமளம் : இனி என்ன விடியிற..நமக்கு..

(தூரத்தில் வெடிச் சத்தம்..)

செல்லாச்சி: நம்மட ஊரே நொறுங்குதப்பா..

மாமி: ஒரு மாதிரியா மரக்கறி தோட்டம் செஞ்சு..ஆடு.. கோழி வளர்த்து... இரண்டு அறையும் மண்டபமும் கட்டினம்..

மகள்: குசினி இன்னம் முடிக்கல்லயே..

மாமி: அதுக்குள்ள .. இப்படி, சாண் ஏற முளம் சறுக்கிறாப்பலதான்..

மணி: சரி..சரி.. படுங்க..வெற்சீற்றும்இல்ல.. (மணி தன் பையை திறந்து சேலை ஒன்றை இழுக்கிறாள்..)

கோமளம்: அக்கா, துணி ஏதாவது இருந்தா தாங்களன் பிள்ளைக்கு மேல் சுடுறாப்பல இருக்கு போருவ ஒண்டும் அவசரத்தில எடுத்து வரல்ல..

(மணி எடுத்த சேலையை உள்ளே மறைக்கிறாள்.

மணி: ஐயோ கோமளம்.. நானும் அவசரத்தில ஒண்டையும் எடுத்து வரல்ல.. (என்றாலும் கோமளம் மணி சேலையை மறைப்பதைப் பார்த்து விடுகிறாள்)


கோமளம்: (கவலையுடன் பெருமூச்சு விட்டபடி..) சரி அக்கா..

மகள்: (ரகசியமாய்) ஏனம்மா பொய் சொன்ன நீ..

மணி: அவளுக்கு இந்த சீலய குடுத்தா மாமியும் நீயும் தம்பியும் என்னத்த போத்திற்று படுப்பீங்க.. (தனக்குள்) அவரத்தில எவ்வளவு உதவி செய்திருப்பாள்.. அவளுக்கு போய் இல்லண்டு பொய் சொல்ல வேண்டி வந்துத்தே...நம்மட வாழ்க்கை..

(காலையில்)
(நலன்புரி நிலையமொன்றில் அனைவரும் உள்ளனர்)

செல்லம்: தேவகி, பிள்ள எவ்வளவு நேரமா குளறுது.. பால அடிச்சுக் குடன்..



நாடகம் : 'சாம்பல் விதைப்புக்கள்'

சூரியா கலாசார குழு

தேவகி: பால்மா முடிஞ்சு போச்சு மாமி.. ஆட்டுக்காலத்தான் தேத்தணியில தொட்டுக் கொடுக்கன்..இந்த தோட்ட கழட்டி விக்கலாம் எண்டா.. நகக்கட எங்க இருக் கெண்டு தெரியல்லயே..

மணி: வா மச்சாள் கட எங்க இருக்கெண்டு தேடிப் பாப்பம்..
(கடைக்குக் செல்கின்றனர்)

நகைக்கடையில்
(தோட்டைக் கழட்டி கொடுக்கின்றனர்)

கடைக்காரர்: இதுக்கு 1000 ரூபாதான் தரலாம்..

தேவகி: கடவுளே.. இந்த வருசம் ஆறாம் மாதந்தான் கத்தரிக்கா வித்த காசில இந்தத் தோட்ட 4200 ரூபாக்கு வாங்கினன்..

கடக்காரர்: நாங்க வாங்கக்குள்ள அப்படித்தான் எடுப்பம். உங்களோட மினக்கெட நேரம் இல்ல எனக்கு..

(தேவகி ஒன்றும் பேசாமல் தோட்டைக் கொடுக்கிறாள்..)

தேவகி: (வரும் வழியில்) பாழாய்ப் போவான்..

மணி: நம்மட கஸ்ட காலத்த காசாக்கிறானுகள்..

முகாமில்
(மணியின் கணவன் ஆடியபடி வருகிறான்)

கணவன்: உன்னத் தேடித்தான் மணி 3 நாளா அலையிறன்.. இந்தா காசு கொஞ்சம்..

மாமி: ஏதுடா மகன் காசு..

கணவன் : அம்மா நம்மட தையல் மெசின் இல்ல தையல்..

மணி: அதுக்கென்ன இப்ப ..


கணவன்: உங்களுக்கு தேவப்படும் எண்டு..அதக் கழட்டி வந்தன்..

மாமி: எங்கடா தையல் மெசின்..

கணவன்: அதான் உங்களுக்கு காசு தேவப்படும் எண்டு இப்பத்தான் ஒரு கடையில வித்தன்..

செல்லாச்சி: அடப்பாவி.... மாமியும் மருமகளுமா சேந்து வேல செய்யிற மெசின வித்து குடிச்சுப் போட்டு வந்து கத அளக்கிறியேடா இப்ப..

கணவன்: அத விடு ஆச்சி சாப்பாடெல்லாம் எப்படி.. மணி.,. ஆரோ நிறுவனம் எல்லாம் கொணந்து கொடுக் காங்களாமே..



மணி: ஓம்..ஓம்..அந்தா வந்திருக்காங்க நிறுவனத்தில இருந்து.. நம்மளப் பாக்கத்தான்..

(வந்திருக்கும் பார்வையாளர்களைக் காட்டுதல்)

மகள்: படிப்பும் இல்ல..ரெஸ்டும்..இல்ல..அம்மாவோட லைனில நிக்கிறதிலதான் நம்மட பொழுது நல்லா போகுது..இவங்களிட்ட நம்மட பிரச்சனையை கேட்டுப்பாக்கலாம்தானே...

(இறங்கி நிறுவனங்களிடம் செல்கிறாள்)

மகள்: (நிறுவனத்திடம்) மேடம், நீங்க இண்டைக்கு என்ன தரப் போறீங்க... (ஒவ்வொரு நிறுவனமாய்) நீங்க என்ன செய்யப் போறீங்க..போட்டோ எடுத்து என்ன செய்யப் போறீங்க? எத்தனை நாளைக்கு மேடம் நீங்க வருவீங்க..நாளைக்கு எங்கட எதிர்காலம் பற்றி என்ன யோசிக்கப் போறீங்க..என்ன யாருமே பேசிறீங்க இல்ல..பேசுங்களன்..

மணி: பிள்ள அவங்க பேசமாட்டாங்க..இப்ப..


மகள்: அப்ப நாங்க எப்பவும் முகாமுக்குள்ள இருக்க வேண்டியதுதான்..நான் போறன் உள்ள.. (முகாமிற்குள் வருகிறாள்)

கணவன்: சரியான சனம்.. மணி..இப்பவே போய் லைனில நில்லு அப்பதான் ஒரு மணிக்கெண்டாலும் சாப் பாட்ட எடுத்து முடிப்பா....சாப்பாடு வரமட்டும் நான் கொஞ்சம் படுக்கன்..

மாமி: மணி, ஆரோ உடுப்புக் குடுக்காங்க போல நான் போய் அந்த லைனில நிக்கன்..

தேவகி: சனங்கள் இப்படியே வந்து கொன்டேதான் இருக்கும்..இவங்க கொடுத்துக்கொண்டே இருப் பாங்களா..?

மணி: உடுப்பும் ஆரோ..,சாப்பாடும் ஆரோ..,தண்ணியும் ஆரோ..,இப்படியே போனா பெண்களின்ர சொந்த வாழ்வு எங்க?



செல்லாச்சி: எங்களின்ர சொந்த வாழ்வு எப்ப..?
(பார்வையாளர்களைப் பார்த்து) பேசுங்களன்...

கோமளம்: இது எங்கட பிரச்சின, அகதிகளிட பிரச்சின இல்ல. இது நம்மட பிரச்சன

தேவகி: இதுதான் இண்டைக்குப் பிரச்சின..

மகள்: இது நமக்குள்ள இருக்கிற பிரச்சின ..நாம எல்லோரும்தான் தான் கதைக்கனும். நாங்க எல்லாம் சொல்லித்தம்.. களைச்சும் போயித்தம்..

செல்லாச்சி: (பார்வையாளர்களைப் பார்த்து) ஏன் நீங்கள் எல்லோரும் சமுதாயம்தானே, இவ்வளவு தரம்கேட்டும் மௌனமா பேசாம இப்பிடியே இருந்தா....

கோமளம் : எங்களின்ர பெண்களின்ர சொந்த வாழ்வு எங்கே..?

"சமுதாயத்தின் நிசப்தமோ பயங்கர இரச்சலாய் எம் நிம்மதியைக் கெடுக்கின்றது" எனும் வாசகத்துடன் நடிகர்கள் ஓரமாய் பார்வையாளர்களைப் பார்த்தபடி நிற்கின்றனர்.

பின்னணியில் "சமுதாயத்தின் நிசப்தமோ பயங்கர இரைச்சலாய் எம் நிம்மதியைக் கெடுக்கிறது" எனும் குரல் இரைச்சலால் தொடங்கி குசுகுசுப்பாய் முடிகிறது..

- நாடகப் பிரதி, தயாரிப்பு -

*விஜயலட்சுமி சேகர்*

# கரையோர கடல் வேட்டை – நூல் அறிமுகம் –




வெள்ளம், வரட்சி, சூறாவளி, கடல் கோள், எரிமலை வெடிப்பு, நிலநடுக்கம் என அனர்த்தங்கள் உண்டு. இவற்றுள் இயற்கையனர்த்தம், செயற்கையனர்த்தம் என இரண்டு வகை. மனிதனது தலையீடுகளால் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் ஏற்படும் அழிவுகள் எல்லாம் செயற்கையனர்த்தம் எனலாம். இதற்கு உதாரணமாக வரட்சி, வெள்ளம், நிலநடுக்கம் எனக்கொள்ளலாம். கடற்கோள் ஒரு இயற்கையனர்த்தம் என அடையா ளப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான அனர்த்தப்பதிவுகளுக்கு தக்க சான்று பகர்கின்றது திருமதி லோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தியின் "கரையோர கடல் வேட்டை" நூல் ஆகும்.

கடந்த 29ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சூறாவளி அனர்த்தம் பற்றிய அழிவுகளை எமது முன்னோர் வாய்மொழி மூலமான வரலாறுகளை கூறுவது போல அல்லாமல் அச்சில் பதிந்த வரலாறாக உண்மையான நிகழ்வுகளை உணர்ச்சி பொங்க எப்போதும் பகிர்ந்து கொள்ளக் கூடிய வகையில் இந்த நூல் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

"கரையோரக் கடல்வேட்டை" என்ற தலைப்புக் கூட இந்த நூலுக்கு இன்னும் சிறப்புக் கொடுக்கின்றது. யதார்த்த நோக்கில் உண்மைச் சம்பவங்களை, அனுபவங்களை அடுக்கிக் கொண்டு செல்வதும் இந்த நூலுக்கு இன்னும் பெருமை சேர்க்கின்றது.

இந்த நூலில் இடம்பெறும் கதைகள், உரையாடல்கள், அனுபவங்கள் என்பன நூலாசிரியையின் நேர்முகப் பகிர்வுகளுடன் கூடிய உண்மைகளை எமக்கு எடுத்தியம்புகின்றது. சம்பவங்களில் வரும் சோக உணர்வுகள் என்றுமே ஈடுசெய்ய முடியாத இழப்புக் களை எடுத்துக் காட்டுகின்றது.

கரையோரக் கடல்வேட்டையில் இடம்பெறும் சோகக் கதைகள், கடல்கோள் அனர்த்தத்தில் அகப்பட்டுக்கொள்ளாத எவராக இருந்தாலும் சரி அவர்களை தாங்களும் நேரடியாக கண்ணுற்ற விடயங்களாக சம்பவங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

“அம்மாவும் இரண்டு தம்பியும் கடலோடு போய்விட்டார்கள்” என்ற விதுர்சனனின் கதை சோக உணர்வுகளை வெளிப்படுத்தும் சம்பவங்களுக்கு சான்றாக உள்ளது.

“என்ர தம்பி எங்க...? என்ர தம்பியைத் தாங்க...” இவ்வாறான கதறல் நிகழ்வுகள் கரையோரக் கடல் வேட்டையை வாசிக்கும் எந்த வாசகனாலும் சரி கண்களில் கண்ணீரை மல்க வைக்கும் தன்மையையும் நூலாசிரியை நேர்கண்டவர்களின் உண்மை உரையாடல்களை எந்த மொழியில் வெளிப்படுத்தினார்களோ அதே மொழிப் பிரயோகத்தில் அனுபவங்களை நகர்த்திக் கொண்டு செல்வதும் நூலை சிறப்படையச் செய்கின்றது.

“கடல் வருகுது அண்ணா...! என்ன செய்வம்.....”, “கெதியாய் இறங்கு ஓடுவம்...” இவ்வாறான பேச்சு மொழிப் பிரயோகங்கள் கையாளப்பட்டிருப்பது கதையை வாசிக்கும் போது விறுவிறுப்பான தன்மையுடன் காணப்படுகின்றது.

“இறக்கும் வரைக்கும் என்னால் மறக்க முடியாது” என்ற நினைவுப் பரிமாற்ற உணர்வுகள் கடல் கோள் அனர்த்த அழிவுகளை என்றுமே படம் பிடித்துக் காட்டுவதாய் அமைகின்றது.”

“குழந்தைகள் வாயில் விரல் வைத்துச் சூப்பியபடியும் இறந்து கிடந்தன.” என்ற அனுபவக் கதை. (திருமதி தங்கேஸ்வரி கணபதிப்பிள்ளை, மாவட்ட வைத்தியசாலை, அக்கரைப்பற்று). சிறுவர்கள் தங்களுடைய மனம் போன போக்கிலே வீட்டு முற்றங்களில் மணல் வீடு கட்டி விளையாடி மகிழ்ந்த நினைவுகள், காலையில் தூக்கம் கலையாமல் உறங்கிக் கொண்டிருந்த குழந்தைகள் பசிக்காக தாயிடம் பாலுண்டு பசி தீர்த்துக் கொண்டிருந்த பச்சிளம் பிஞ்சுகள்

எனக் கோரப் பிடிக்குள் சிக்குண்டு சென்ற அந்தப் பரிதாபக்கதைகளை கரையோரக் கடல் வேட்டை என்னும் நூல் எமக்கு வரலாறாகவே தருகின்றது.

"என் மனதைத் தொட்ட நிஜம்" என்ற கதை ஆழிப் பேரலையினால் தனது மகனை இழந்த தாய் சோகத்தை தாங்க முடியாமல் தூக்குப்போட்டு தற்கொலை செய்த உண்மைக்கதை படப்பிடிப்புடன் இடம் பெற்றிருப்பது இன்னும் வாசகரை கண்ணீர் வடிக்கச் செய்கின்றது.

இந்நூலின் சிறப்பியல்புகளை எடுத்து நோக்கும்போது

(1) உண்மைச்சம்பவங்களாக இருத்தல்.
(2) பேச்சு மொழிப் பிரயோகம் கையாளப்படல்.
(3) நேர்காணலில் எந்த மொழி பயன்பட்டதோ அதே மொழியில் எழுதப்படல்.
(4) கவர்ச்சியான தலைப்புகள்.
(5) வாசகரை வாசிக்கத் தூண்டும் நடை (விறு விறுப்பான நடை)
(6) நினைவுகள் நிஜங்களாக இருத்தல்.
(7) உண்மைச் சம்பவங்களை அர்த்தப்படுத்த மேலும் புகைப்படச் சான்றுகளை எடுத்துக்காட்டல்.
(8) ஆதாரத்துடனான விளக்கங்கள். (கதை சொன்னவர், வயது, இடம் குறிப்பிடல்)


இவ்வாறான சிறப்புக்களைக் கொண்டிருக்கும் "கரையோரக் கடல் வேட்டை" என்றும் எதிர்கால சந்ததியினரால் அறிந்து கொள்ளக் கூடிய ஒரு மூல நூலாகவும் வழி நூலாகவும் திகழும் என நினைக்கின்றேன். அதிகளவு சிறப்புக்களை கொண்டிருக்கும் இந்நூலில் ஓரிரு விடயங்களையும் இன்னும் சேர்த்திருத்தல் நல்லது என எதிர்பார்க்கின்றோம். அதாவது குறுகியகால ஆய்வு என்பதாலும் நூலில் பெரியநீலாவணை தொடக்கம் வாகரை வரையிலான கரையோர மக்களின் சுனாமி அனர்த்தப் பதிவுகளும் இடம் பெறவில்லை. எவராவது முன்வந்து இது போன்ற நூலை ஆக்குதல்

வரவேற்கக் கூடிய ஒன்றாகும். கடல் கோள் அனர்த்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டது அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களாகும். இவற்றுள் கரையோரக் கடல் வேட்டை அம்பாறை மாவட்டத்தையே களமாகக் கொண்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் அனர்த்த அழிவுகளும் ஒரு நூல் வடிவம் பெற வேண்டும் என எதிர்பார்க் கின்றேன்.

இது தவிர இவ்வாறான இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்கள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு சில நடவடிக்கைகளை எடுத்துப் பட்டியல் படுத்தியிருக் கலாம். நூலில் வரும் கதைகளில் இவ்வாறு தான் தப்பினோம், என அவர்கள் குறிப்பிட்டிருந்தாலும் (நீந்துதல், மரத்தில் ஏறுதல்) மக்களுக்கு இலகுவில் விளக்கக்கூடிய முறையில் எடுத்துக் காட்டியிருக்கலாம். ஒவ்வொரு பிரச்சினைக்கு தீர்வுகள் முக்கியம் என்பது போல இந்த அனர்த்தங்களுக்கும் சில நடவடிக்கைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

தங்களை எவ்வாறு பாதுகாத்தல் என்பதற்கு இந்த தகவல்கள் படிப்பினையாக இருக்கும்.

எவ்வாறாயினும் மக்களுக்கு பல படிப்பினைகளையும், அனுபவங்களையும், அழிவுகளையும் கொடுத்துச் சென்ற "கடல் கோள்" பற்றிய நூலை ஆசிரியர் எவ்வளவு சிரமப்பட்டு ஆக்கியி ருக்கிறார் என்பது தெரிகின்றது. இது போன்று இன்னும் பல நூல் களை இலக்கிய உலகிற்கு ஆக்கித் தர வேண்டும். என்றும் இவரது பணி சிறக்க வேண்டும் என்றும் வாழ்த்துக்களுடன்.....



# பனை மரத்தில் எப்படி ஏறினேனென்று தெரியவில்லை



சம்பவம்

*திருமதி : கணகேஸ்வரி அண்ணாத்துரை*
*(50 வயது) செல்வ நாயருபுரம்*
*கொட்டுக்கல்*

கொட்டுக் கல்லில் எங்களது வீடு கடற் கரையிலிருந்து நான்காவது வீடு. எங்களுக்கு இரண்டு பிள்ளைகள் கவிதா (26 வயது) கவிதாராணி (22 வயது) என்கணவர் கடை செய்து வந்தார்.


26.12.2004 அன்று முன்வளவிற்குள் தம்பியும், நானும் கல் அடுக்கிக் கொண்டிருந்தோம். அப்போது கடல் கொந்தழித்து வந்ததைக் கண்டு ஓடி வந்து பனை மரத்தில் நானும், தம்பியும் ஏறியிருந்தோம். குனிந்து காலைப்பார்த்தேன் செருப்பு அப்படியே இருந்தது. எப்படி ஏறினேன் என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது. 4-5 அடி அளவில் தண்ணீர் அடித்துச் சென்றது. பின் அலை போனதும் இறங்கி வீட்டுக்கு ஓடி வந்தோம். என் கணவரும் தம்பியின் எட்டுவயதுப் பிள்ளையும் என் தங்கையும் பக்கத்தில் இருந்த பெரிய ஆலமரத்தினடியில் போய் நின்றார்கள். பின்பு அடுத்த அலை வருவதைக்கண்டு மரத்தில் ஏறியிருந்தோம். அவ் அலையும் போன பின்பு எல்லோரும் இறங்கி திடல் வழியால் பொத்துவில் பள்ளிவாசலில் ஓடிப்போய்

இருந்தோம். மூன்றாவது அலைக்கு அந்தப் பெரிய ஆலமரமும் கெழிந்து விட்டதென்றும் அதில் சிலர் இருந்து இறந்துவிட்டனர் என்றும் அறிந்தோம்.

பொத்துவில் பள்ளிவாசலுக்கு போன பின்பு தான் எல்லா இடமும் கடல் கொந்தழிப்பு உண்டானதென்று அறிந்து பாண்டிருப்பு அம்மா வீட்டில் கொண்டு போய் விட்டு வந்த இரண்டு பிள்ளைகளின் நினைவும் வந்து கவலைப்பட்டேன். ஆனால் எந்த விதமான தொடர்புகளுமில்லாது இருந்து அடுத்த நாள் பாண்டிருப்பிற்குச் சென்று அங்கு யாருமில்லாது தேடியதில் அம்பாறை முகாமில் இருப்பதாக அறிந்து அங்கு சென்ற போது தங்கையும் இரண்டாவது மகள் மட்டுமே இருந்தனர். நடந்தது பற்றி விசாரித்தேன்.


என் அம்மாவும், தங்கையும் பாண்டிருப்பில் இருந்தார்கள். அம்மாவுக்கு கொஞ்சம் சுகமில்லாத படியால் மூத்த மகளை அங்கே அனுப்பினேன். பின் சில நாட்களுக்கு முன்புதான் இரண்டாவது மகள் சென்றாள். அதில் முதல் அலையிலேயே அம்மாவும், மூத்தமகளும் அடி பட்டு இறந்து போனார்களாம். அடுத்த மகளை அலை அடித்துக் கொண்டு போன வேகத்தில் ஒரு நாவல் மரத்தில் ரீ சேட்டில் கொழுவுப் பட்டுத் தொங்கி னாளாம். பின்பு தண்ணீர் கொஞ்சம் குறைந்த பின்பு கீழே இறங்கினாளாம். ஸ்கேட் தண்ணீரில் அடித்துச் செல்லப் பட்டதாம். அதனால் தண்ணீருக் குள்ளேயே நின்றாளாம் நாலைந்து இளைஞர்கள் போய் வெளியேவாவென்று அழைத்தனராம். "நான் அப்பிடியே செத்துப் போறன் எப்படி வெளியே வருவது", என்று தன் நிலையைக் கூறினாளாம். அங்கு வந்தவர் ஒருவர் கைகளில் நிறையச் சாறிகள் சுற்றி வைத்திருந்தாராம் அதில் ஒன்றைக் கொடுக்க அதைக்கட்டிக் கொண்டு தான் வெளியே வந்ததாகவும் என் மகள் தன் சுனாமி அனுபவத்தையும், இழப்புகளையும் கூறி அழுதாள்.

**நன்றி: "கரையோர கடல் வேட்டை"**



# அவளுக்காய் ஒரு நிமிடம்






காலைச் சாப்பாடு செய்து கண்ணனை வேலைக்கனுப்பி ஆரணியை பாடசாலைக்கு அனுப்பி, கம்சனை குளிப்பாட்டி தூங்க வைக்க மதியமாகும். மீண்டும் சமைத்து முடிய ஆரணியை ரியூச னுக்கு அனுப்ப வேண்டும். கம்சன் எழுந்து விடுவான். கம்சனை கண் ணன் கவனிக்க இரவுச் சாப்பாடு செய்ய வேண்டும்.

அண்ணனுடன் காற்சட்டை போட்டுக் கொண்டு முந்திரிகைக் காடுகளில் தும்பி பிடித்த காலங் களில் சைக்கிளில் பாடசாலை, ரியூசன் என நண்பர்களுடன் அலையும் காலங்களில் பின்னேரப் பொழுதுகளில் கடற்கரை மணல் வீடுகளுடன் கதைபேசும் தருணங்களில் வாழ்வின் சிலிர்ப்பு அவளினுள் கவிந்திருந்தது.

இப்போதெல்லாம் எந்தக் கற்பனைக் கதைகளையும் அவளால் உருவாக்க முடிவதில்லை. என்ன சமைப்பது? ஆரணியை எங்கு ரியூசனுக்கு அனுப்புவது? கம்சனை எப்படிக் கவனிப்பது? ஒரு நிமிடமும் நில்லாமல் ஓடிக் கொண்டிருக்கும் வாழ்வு.

கண்ணன் வேலைவிடயமாய் வெளியூர் செல்லும் நாட்கள் ஒவ்வொன்றையும் தனக்கானதாய் மாற்றிக் கொள்வாள். அப்படி ஒரு நாள்தான் இன்று மழையும் பெய்து கொண்டிருந்தது.

மழைக்காலம் தான். மார்கழி மழை, ஊரில் ஒவ்வொரு மாதமும் விசேசம் தான். கொன்றை மரம் பூத்தால் ஒரு காலம், மார்கழி மழை ஒரு விசேசம். இங்கெல்லாம் மாதம் போவதும் தெரிவதில்லை வருவதும் தெரிவதில்லை.

யன்னல் ஓரமாய் அமர்ந்திருந்த அவள் முகத்தில் மழைச்சாரல் சிறு சிறு நீர்த்தூறலை சேர்த்து வைத்திருந்தது. வீதியில் தெரியும் ஒவ்வொரு நிறக்குடையும் தார்வீதிகளை மேலும் அழகுபடுத்தின. கம்சன் தூங்கிக்கொண்டிருந்தான். ஆரணி ரியூசன் விட்டு வர நேரமாகும்.

இந்த மழை ஒவ்வொரு நிமிடத்தையும் அவளுக்கானதாய் உணர்த்துகின்றது. என்றோ எழுதி வைத்து பூர்த்தியாக்காத கவிதையை அவள் மனம் மீண்டும் ஞாபகப்படுத்தியது. எழுத வேண்டும் எனும் நினைப்பு பாதியுடன் முழிக்கும் கவிதையையும் பேனையையும் எடுத்துக் கொண்டாள். எங்கிருந்தோ வந்து சேரும் பருவ காலப் பறவைகள் போல் வார்த்தைகள் வந்து சேர்ந்தன மௌனம் உடைந்து வெள்ளமாய் பெருகின கவிதைகள்.

இடிச்சத்தத்துடன் இணைந்து வந்தது கதவு தட்டும் ஓசை, கவிதையை அப்படியே வைத்துவிட்டு கதவைத்திறந்தாள். குடையில் ஒளிந்து கொண்டிருந்தான் கண்ணனுடன் வேலை செய்யும் ரவி. ரவியிடம் கொடுக்கச் சொன்ன கடிதம் இப்போது தான் ஞாபகம் வந்தது. கடிதத்தை எடுத்துக் கொடுத்தவள் அவசரமாய் தலையைச் சீவிக்கொண்டு கம்சனை எழுப்பி பக்கத்து வீட்டில் கொடுத்து விட்டு, அவளும் ஒரு குடையுடன் ஆரணியை கூட்டி வரச் சென்றாள். கண்ணன் இருந்திருந்தால் வேலை விட்டு வரும் போது மரக்கறியும் வாங்கிக் கொண்டு ஆரணியையும் ஏற்றிக் கொண்டு வருவான். கண்ணனைச் சுற்றியே நினைவு ஓடிக்கொண்டிருந்தது. அவள் எழுதுவதற்கு கண்ணன் தடையில்லை. ஆனால் தான் எழுதுவது ஏன் குறைந்தது? என்பதற்கு அவளால் விடைகாணமுடியவில்லை.

மழையும் விடுவதாயில்லை அவள் சுடிதாரையும் நனைத்து நடக்கவிடாமல் இடைஞ்சல் செய்து கொண்டிருந்தது. உள்ளிருந்து பார்க்கும் போது இந்த மழை எவ்வளவு அழகானது. இப்போது அலுப்பூட்டியது. எல்லாம் இப்படித்தானோ? யன்னல் ஓரமாய் அவள் விட்டு வந்த கவிதையை மழைச் சாரல் நனைக்க எழுத்துகள் எல்லாம் மெல்ல கசிந்து கொண்டிருந்தன.

## நதியும் நண்டும்



நதியின் கரையில்
காத்திருக்கிறது
ஒரு நண்டு

தைரியம் மட்டுமே
போதும்
என்றெண்ணம்

ஒரு ஓடம் ஓடுவதற்கு
தயாராகின்றது

நதிக்கு சிரிப்பு
நண்டுக்கு கடுப்பு
ஓடம் ஓட
முயல்கிறது
நண்டு பின்னால்

நப்பாசை - இந்த
நண்டுக்கு
ஓடத்தின் பின்
ஓடுவதற்கு
தயாராகின்றது

நதி சிரிக்கிறது!

கி. கலைமகள் -

# வன்முறை - பண்பாடு- எதிர்வினை ஆற்றல்கள்

உலகளாவிய ரீதியில் எங்கும் காணப்படுகிற, எங்கும் நிகழ்ந்து வருகிற ஒரு பால்நிலைக் கூருணர்வு அடிப்படையிலான பிரச்சினையாகப் பெண்களுக்கு எதிரான வன்முறை அவதானிக்கப்படுகிறது. அது, அனைத்து கலாசார, சமய, பொருளாதார சமூகங்களிலும், சமுதாயக் குழுக்களிலும் ஆழ ஊடுருவியுள்ள பிரச்சினையும் ஆகும். இன்று, பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பில் பல்வேறு ஆய்வுகளும், எழுத்து வழிப்பட்ட ஆவணங்களும் சமூகவியல், மானுடவியல், சமூக உளவியல், பெண்நிலைக் கற்கை நெறிகள் முதலான பல்வேறு தளங்களில் இருந்தும் முன் வைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் வன்முறை பற்றிப் பேசுவது, எழுதுவது, ஆய்வு செய்வது என்கிற விடயங்களுக்கும் அப்பால், வன்முறைக்கு உள்ளானவரின் ‘அகவயநிலைநின்று’ சிந்திப்பதும், பிரச்சினையின் யதார்த்தத்திற்கு முகம் கொடுக்க அவர்களை வழிப்படுத்துவதும், பிரதானமாக ‘அவசியமற்ற குற்ற உணர்விலிருந்து’ அவர்களை விடுவிப்பதும் இப்பிரச்சினையின் பால் சிரத்தை காட்டுவோரின் குறிப்பிடத்தக்க பணித்திட்டங்களாக அமைகின்றன.

**வறையறைகள் தாண்டி ~ :**

பெண்கள் பெண்களாக இருப்பதனாலேயே பால்நிலை ரீதியிலான வன்முறைக்குள்ளாகின்றனர் என்பது ஒரு பிரபலமான வரைவிலக்கணமாக இருந்து வருகிறது. உடலியல், உளவியல் மற்றும் பாலியல் அடிப்படையில் பிரதானமாகப் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பகுத்து நோக்கப்படுகிறது. இருந்தபோதிலும் பார்வை, பேச்சு, செய்கை, குறியீடுகள், விரும்பத்தகாத நடத்தைக் கூறுகள் என்று பல அம்சங்கள் வன்முறையாக இனங்காணப்படுகிறன்றன. பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்கிற பிரச்சினை பெண்களது வாழ்வியலின் அனைத்துப் படி நிலைகளையும், பகுதிகளையும் ஊடறுத்துச் சென்று, அவர்களின் சுயாதீனத்துக்கும், தன்னாற

றல்வெளிப்பாட்டுக்கும் கணிசமான அச்சுறுத்தலாக அமைகிறது. அது வெறுமனே ஒரு எச்சரிக்கையாக மட்டுமன்றி, பண்பாட்டு நியமங்கள் மேலாதிக்கக் கருத்தியலாயும், ஆணாதிக்க நலன்கள் சார்ந்து இயங்குகிற ஒரு சமூகக் கட்டமைப்பில், பாதிப்புக்குள்ளான பெண்களின் வாழ்க்கை முழுமையையும் சீர்குலையச் செய்வதாயும் சில சந்தர்ப்பங்களில் அமைந்து விடுகிறது.

வீட்டிலிருந்து, வேலைத்தளம் வரையிலும், சமூகமயமான பொது மையங்களிலும், சாலைகளிலும், போக்குவரத்திலும் என்றவாறு வன்முறையின் வியாபகம் பெண்களை, அவர்களின் சுயாதீனத்தையும், சுய கௌரவத்தையும் அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறது. வன்முறையின் காயங்கள் வெளித்தெரியாதபடி பண்பாட்டுப் பூச்சிகளும், தத்துவ விசாரம் அல்லது பெரியோரின் புத்திமதிகள் என்ற அர்த்தமற்ற திரைகளின் பின்னும் ஆழமான பிரச்சினையின் பரிமாணங்கள் மறைக்கப்பட்டு விடுகின்றன.

உலகளாவிய நிலையில் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான பிரச்சினைகளின் இயல்புகளை விளங்கிக் கொள்வதற்கான முயற்சிகள் அண்மிய காலங்களில் அதிகரித்து வருகின்றன. இதன் வழியாக, இதன் சமூகப் பரிணாமங்களைப் பெண் நிலை நின்று ஒரு ஆக்கபூர்வமான செயல்வாதத்தையும் (Activism), கோட்பாட்டாக்க முயற்சியையும் மேற்கொள்ளும் திசையில் உலகம் நடை போடுகிறது.

ஒவ்வொரு வருடமும் உலகின் ஒவ்வொரு மூலையில் இருந்தும் புதிய நூல்கள், ஆய்வுக் கட்டரைகள், ஆவண அறிக்கைகள் இப்பிரச்சினையை மையப் படுத்தி வெளிவந்த வண்ணமே உள்ளன; சமாந்தரமாக அரசு, அரசசார்பற்ற அமையங்கள், தன்னார்வ நிறுவனங்களும் சமூக மட்டத்தில் இப்பிரச்சினை மீது கவனத்தைத் திருப்பவும், பிரச்சினையின் மூலவேர்களை இனங்கண்டு, தந்திரோபாய மட்டங்கள், தீர்வுகளை அணுகவும் வெவ்வேறு செயற்றிட்டங்களில் ஈடுபட்டும் வருகின்றன. இவற்றோடு மகாநாடுகள், செயலமர்வுகள்,

மதீப்பீட்டு நடவடிக்கைகள், அணிதிரட்டல் அரங்குகள், பிரசாரப்படுத்தல், பால்நிலைக் கல்வியூட்டல் என்பனவும் – விமர்சனங்களுக்கிடையே – முன்னெடுக்கப்படுகின்றன. இவை பால்நிலை அடிப்படையிலான வன்முறையைப் புரிந்து கொள்ளவும், அதனை எதிர் கொள்வதற்கான உபாயங்களைக் கட்டியெழுப்பவும் முயற்சிக்கின்றன.

இந்த இடத்திலே விவாதமாக முன் வைக்கப்படுகிற கருத்து யாதெனில் இதர சமூக, மானுடப் பிரச்சினைகளைப் போல இதனையும் ஒற்றைப் பரிமான ரீதியில் நேர்கோட்டுச் சிந்தனை வழியாக அணுகுவது பயனற்றது என்பதே ஆகும். வெறும் எண்ணக் கருவாக்கம், கோட்பாட்டாக்கம், புலமைத்துவச் சொல்லாடல்கள், ஆய்வுகள் என்பவற்றின் பயனுறுதியான விளைவுகள் எவை என்ற வினாவும் இன்று உரத்துக் கேட்கப்படுகிறது.

எனவே வன்முறைக்கு உள்ளானவரின் நலன்கள், அவருக்கான வழிப்படுத்தல், வினைத்திறன் வாய்ந்த தொடர்பாடல் முறைமை என்பவற்றை மிகச் சுருக்கமாக இக்கட்டுரையூடு பரிசீலித்தல் பயனுள்ளதாக அமையும்.

**வன்முறைக்கு உள்ளானவரை அணுகும் பாங்கு :-**

வன்முறையின் உள்ளார்ந்த பாதிப்புகளை மிக ஆழமான நிலை நின்று, அதேவேளை வெறும் உணர்ச்சிமயமான சிந்தனை முறைமை யினின்றும் விடுபட்டு ஆரோக்கியமான சமூக மனோபாவத்துடன் அணுகுவதே முதற்படியாக அமைகிறது. எனவே, வன்முறைக்குள்ளான பெண் மீதான அனைத்து வகையான தலையீடுகளும், அப்பெண் தனது சுயமான விருப்பத்தெரிவை எடுக்கக் கூடிய தன்னாற்றலை எளிதுபடுத்தும் விதமாக மேற்கொள்ளப்படுதல் முக்கியமானது. வன்முறைப் பாதிப்பு / வடுவுக்குள்ளான நிலையிலிருந்து குறித்த பெண்ணை மீட்டெடுப்பதனை நோக்காகக் கொண்ட குறித்த செயன் முறையில் அப் பெண் முழுமையான பங்குபற்றுநராக ஈடுபடுத்தப்படுதல்

**எதிர்நிலைச் செயற்பாடுகளைத் தவிர்த்தல் :-**

வன்முறைச் சம்பவம் தொடர்பான எவ்விதமான தகவலையும் அலட்சியப்படுத்தி விடக் கூடாது. வன்முறைக்குள்ளானவரின் உள்ளார்ந்த வலியையும், குழப்பத்தையும், மனப்பதகளிப்பையும் குறைத்து மதிப்பிடுதல் தகாது. பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டவரின் செயற்பாடுகள் /தீர்மானங்கள் /அசைவியக்கங்கள் / வாழ்க்கைக் கோலங்கள் தொடர் பான எதிர்மறை விமர்சனங்கள் முன்வைக்கப்படுதல் கூடாது. அத்துடன் அவர்களுக்கு திணிப்பு ரீதியில் ஆலோசனை கூறுதலையும், அவரின் சார்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளுதலையும் தவிர்த்தல் அவசியம். வன்முறையை ஏற்படுத்தியவருக்குச் சார்பான கருத்துக்களையும் தெரிவித்தல் கூடாது.

தீர்ப்பிடுவதற்கான, முற்சாய்வுகளுக்கான, விமர்சனங்களுக்கான எந்தவொரு சிறு எத்தனமும் இப்பிரச்சினையை அணுகுவோர் மேற் கொள்வதானது பிரச்சினைக்குள்ளானவரை மேலும் நெருக்கீடு செய்யும் நிலைமையிலேயே சென்று முடிவுறும். இதனால் மனக்குழப்பமும், தன்னாற்றல் இழந்து, சமூக நிந்தனைக்கு உரியவராகத் தன்னைக் கருதவும் வழியேற்படும். இதன் வழி சுய பச்சாதாபம் என்னும் நாசச்சக்கரத்தினுள் அவர்கள் (வன்முறைக்குள்ளானோர்) அகப்பட்டுக் கொள்ளலாம். வன்முறையின் கட்டவிழ்ப்பு வியாக்கியானங்களை அதிமேதாவித்தனமாக மேற்கொள்ளும் பரிசோதனைக்களமாக சேவை வழங்குதலில் பிரயோகித்தல் அடிப்படை அறநெறிகளுக்கே முரணானது.

வன்முறைக்குள்ளானவருடனான இடைவினை பரஸ்பர நம்பிக்கை, உறுதியான உணர்வுச் சமநிலை, இரகசியம் காப்பாற்றும் உறுதிப்பாடு என்பவற்றாலேயே சாத்தியமான அளவுக்கு வெற்றி பெறும். எனவே சேவை வழங்குவோர் தமது மனச்சோர்வு, உணர்ச்சிமயமாதல், கையாலாகா நிலை என்பவற்றினை வன்முறைக்குள்ளானோரிடம் வெளிப்படுத்தல் கூடாது. மாறாக அவர்களின் இயலுமை, அவர்களுக் குள்ள சக்தி, தொடர்புபடுத்தும் எல்லைப்பரப்பு என்பவற்றினை வெளிப்

படையாகவே ஒப்புக்கொள்ளுதல் நலமாகும்.

இயன்றளவுக்கு தனிமையும், சுயாதீனமும், பாதிப்புக்குள்ளானவரின் மன அழுத்தத்தைத் தணிக்கும் படியான உள – பௌதீகச் சுற்றாடலும் கட்டியெழுப்பப்படுதலில் கவனிப்பை மேற்கொள்வது, இடைவினையின் நெருக்கத் தன்மையை அதிகரிக்கச் செய்யும். இதன்போது, பாதிப்பின் மூலமாக ஏற்பட்ட இறுக்க உணர்வைத் தளர்த்தும்படியான செயற் பாட்டறிவு, திறந்த வகையிலான சம்பாஷனை, தோழமை உணர்வு, கரிசனை வெளிப்பாடு என்பனவும் உகந்த துணைக் காரணிகளாய் அமையும்.

**சமூக நிறுவனங்களின் வகிபாவம் :-**

இலங்கை முதலான ஆசிய விழுமியம் பேணும், பாரம்பரியக் கருத்தியல்களின் செல்வாக்கு மிக்க நாடுகளில், பெண்களுக்கெதிரான வன்முறை என்ற பிரச்சினை இன்னும் ஆழமான கவனிப்பினைப் பெற்றதாக இல்லை. எனவே குடும்பம், மருத்துவமனை, சட்டத்துறை, காவல்துறை என்பனவற்றிலும் இது தொடர்பான விரிவார்ந்த, நேர்நிலையான கருத்துக்களம் இடம் பெறுவதாகக் காணமுடிய வில்லை. சமூகமயமான பாதுகாப்பு அல்லது புகலிடம் என்ற ஓர் அமைப்பும் ஸ்தாபன ரீதியில் நிறுவப்படவில்லை.

தந்தையாதிக்க, ஆணாதிக்க விழுமியங்களை, நியமங்களை அளவு கோல்களாகக் கொண்டியங்கும் இந் நிறுவனங்களினுள் கருத்தியல் மாற்றம், கொள்கை மாற்றம் என்பவற்றை ஏற்படுத்துவதே இங்கு முதற் கட்டப் பணியாக இனங்காணப்படுகிறது. ஆயின், அத்தகைய மாற்றங்களை நோக்கிய எந்தவொரு சமூக இயக்கச் செயற்பாடும் எளிதானதாக அமைந்து விடாது. அதற்காக மாற்றங்களை நோக்கிய சிறு அடிமைகளைத் தானும் நிறுத்தி விட்டு வாழாதிருக்கவும் முடியாது.

எனவே குடும்ப வைத்தியசாலை, காவல் நிலையம், சட்டவாட்சி மன்றம், நீதிமன்றம் என்பன சார்ந்து உபாயங்கள், உரிமைகள் அடிப் படையில் பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பில் சிந்திப்போரும்,

குறிப்பாக மட்டக்களப்புச் சமூகக் கட்டடைப்பினுள் இதற்கான அவசியம் உணரப்பட்டு சில காத்திரமான நடவடிக்கைகள் 'முளை' கொள்ளத் தொடங்கியுள்ளமை அவதானிக்க முடிகிறது.

பொதுவாக மனிதர்கள் எவருமே வன்முறையினால் மகிழ்ச்சி கொள்வதென்பது சாத்தியமற்றது. இயல்பான, ஆரோக்கியமான மனிதத் தொடர்பாடலுக்கும், சகமனித ஜீவியைக் கௌரவிக்கும் மனப்பாங்கு விருத்திக்கும் கூட மேலே விபரித்த சமூக நிறுவனங்கள் ஆரோக்கியமான வகையில் பங்காற்றலாம். அதற்கும் அப்பால் வன்முறைகளை பண்பாட்டு மெழுகிட்டு மறைப்பதும் ஏற்புடைமை ஆகாது. உலகளாவிய மாற்றங்களைக் கிரகித்து, சமூகக் கூட்டொருமைப்பாட்டின் சீர்குலைவை நுணுகி ஆராய்ந்து பால்நிலை சார்ந்த வன்முறைகளின் சமூக மயமான கட்டமைப்பு நிலைகளையும் பரிசீலித்து இங்கு அழுத்திக் காட்டிய திறன்களையும், உபாயங்களையும் கருத்திற்கொண்டு பால் நிலை சார்ந்த வன்முறைக்கெதிரான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுதல் சமகாலத்தின் முதனிலைத் தேவையாகிறது.

எனவே வன்முறை, பண்பாடு, சமூகக்கட்டமைப்பு, அதில் நிகழ்த்தப்படும் இடைவினை, அவற்றிற்கு இருக்க வேண்டிய பண்பு நிலைக் குணாம்சங்கள் ஆகியவற்றைச் சுருக்கமாகப் பரிசீலித்த இக்கட்டுரையின் மூலமான சிந்தனை எழுப்புதல்கள் – வன்முறை அற்ற, இயல்பான, சுயாதீனமான, ஆரோக்கியமான பால் நிலை உறவுகள் நிலவும் ஓர் அபிவிருத்திக்கு இசைவான சமூகக்கட்டுமானத்தின் மூலக்கற்களாய் அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் தன்னை நிறைவு செய்து கொள்கிறது. – சிந்தனை / செயல் வாதத்திற்கான ஆரம்பத்தை நோக்கியபடி

–சந்திரசேகரன் சசிதரன்.

# உடும்புப் பிடியாய்



என் இதயவறையின்
நெஞ்சுக் கூட்டுக்குள்
எப்பொழுதும் ஒரு மனப்பாடம்

என் விழிகள் எப்போதும்
வேதனையை மட்டுமே
இரைமீட்டி என்னை
மென்மேலும் வெறுப்பேற்றுகிறது...

தூசு படிந்த நினைவலைகளை
ஓட்டறை தட்டி ஏட்டுச்சுவட்டில்
போட்டால் எதிரியாக பார்க்கின்றன
என் கவிதை துளிகள்

நினைவிலே வாழ்ந்த - பின்பு
மறப்பது கஸ்டமானது தான்
ஒரு தடவை இடறி விழுவதற்கே!
ஓயாது அழுதவண்ணம் இருக்கும்
என் இதயத்தை பார்க்க புரிகிறது...

உடும்பு பிடியாய் பற்றி பிடித்துக் கொண்டு
கைகொட்டி மகிழ்கிறது என் பழைய
நினைவலைகள் என்றென்றும்...

குயிலினி

ஆதலால் தான் என்
இதயவறையின் நெஞ்சுக் கூட்டுக்குள்
எப்பொழுதும் ஒரு மனப்பாடம்

அதை ஆறுதல்படுத்தவும் முடியவில்லை
தேற்றி விடவும் தெரியவில்லை...

# தவறு

வினுஷாவைக் காணவில்லை. அவளது தாய் கூப்பிட்டபடி இருந்தாள். வளவு முழுவதும் சுற்றிச் சுற்றி தேடினாள். வினுஷாவைக் காணவில்லை. வீட்டுக்குள் சென்று பார்த்தாள். அங்கே அவள் தனியே இருந்தபடி எதனையோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

வினுஷா சிறிய பெண். நான்காம் தரம் படிக்கிறாள். எதைப்பற்றியும் யோசிக்கும் வயதல்ல. இன்று நடந்த ஒரு சிறிய பிரச்சினை அவளை அந்த அறைக்குள் இருத்தி விட்டது. வினுஷா அழுதபடி இருந்தாள்.

மாலினி இவள் அம்மா; தகப்பன் கோபாலசிங்கம்; இவர்களுக்கு மூன்று குழந்தைகள்; வினுஷா கடைசிப் பிள்ளை.

கோபாலசிங்கம் கூலித் தொழில் செய்து பிள்ளைகளை வளர்த்து வந்தான். கஷ்டத்தின் மத்தியிலும், பள்ளிக்கூடம் அனுப்பினான். 'அன்றாடங் காய்ச்சி' என்று இவர்கள் குடும்பம் வாழ்ந்து வந்தது.

கோபாலசிங்கத்தின் மனைவி மாலினி உலகம் தெரியாதவள். கணவன், குழந்தைகள் வீடு இவற்றைத் தவிர எதுவும் தெரியாதவள். சமைப்பது, வீடு வளவுகளைத் துப்பரவு செய்வது வாசல் பெருக்குவது பிள்ளைகளைப் பார்ப்பது இவைதான் அவள் வேலைகளும், அவள் உலகமும். கோபாலசிங்கம் உழைத்து வந்தால்தான் சாப்பாடு என்று வாழ்ந்து வந்த குடும்பத்தில் மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தவள் வினுஷா.

வினுஷாவிற்கும் ஏனைய இரண்டு பிள்ளைகள் பிறப்பதற்கும் இடை வெளி அதிகமாக இருந்தது. வினுஷா தாமதித்துப் பிறந்தவள்.

"வினுஷா வீட்டுக்குள்ள இருந்து என்ன செய்யிறா வெளியால வா" எனத் தாய் மாலினி அழைத்தும் அவள் வெளியே வரவில்லை.

பார்க்கப்போனால் அவள் உணர்வுகளுக்கு ஏதோ நிகழ்ந்திருக்க வேண்டும். அல்லது உணர்வுகள் தாக்கப்பட்டிருக்க வேண்டும். தாய் மாலினி பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளத் தெரியாதவள் என்றே கோபாலசிங்கம் கூறுவான்.

மாலினி ஒரு மொக்கு, அறிவில்லாதவள் என்றே அவன் ஏசுவ துண்டு. இதனால் எந்தப் பிரச்சினை வந்தாலும் கோபாலசிங்கமே அதற்கு

முகம் கொடுப்பான். இதனால் கோபாலசிங்கத்திற்கு பிரச்சினை தெரிய வந்தால், அதனைப் பெரிதுபடுத்தி விடுவான். சத்தம் போட்டுக் கதைப்பான், ஏசுவான். இந்தக் குணவியல்பு அவர்கள் குடும்பத்தாருக்கு நன்கு தெரியும். அவனிடம் பிரச்சினையைக் கூறாது விட வேண்டும் என்றே மனைவியும் பிள்ளைகளும் நினைத்தனர்.

ஆனால் கோபாலசிங்கம் வந்தவுடன் வினுஷா ஏதோ கூறியிருக்க வேண்டும் கோபாலசிங்கத்தின் செய்கைகளில் கோபம் கொப்பளித்துக் கொண்டிருந்தது. அவன் வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசத் தொடங்கினான். பெரிய சத்தத்தில் அயலவர்கட்கு கேட்குமாறு ஏசினான்.

மாலினி எதுவுமே பேச முடியாதபடிக்கு ஊமையாய் சிலையாட்டம் நின்றாள். கோபாலசிங்கம் தனது மனைவியின் தங்கை குடும்பத்திற்கே அவ்வாறு ஏசிக் கொண்டிருந்தான்.

மாலினியின் தங்கையும் திருமணம் முடித்து இவர்களது குடும்பத்திற்கு அருகிலேயே வசித்து வந்தாள். மாலினிக்கும், அவள் தங்கைக்கும் ஒரு பொழுதும் பொருந்தி வருவதில்லை. இருவரும் நாள் தவறாமல் சண்டை பிடித்தபடி இருப்பார்கள். அன்றும் அப்படித்தான் வினுஷா அழுவதற்கு மாலினியின் தங்கையின் ஏச்சு காரணமாகி விட்டது.

நீண்ட இடைவெளிக்குப் பின்பு வினுஷா மாலினிக்குப் பிறந்திருந்த படியால் வினுஷாவின் பிறப்பில் பிழை கண்டு வீண் பிரச்சினையைத் தூண்டி விட்டாள் மாலினியின் தங்கை.

குழந்தை வினுஷாவுக்கு முன்னால் வாயில் வந்தபடிக்கு மாலினி யின் தங்கை ஏசியதால் பிரச்சினை வேறு வடிவம் எடுத்தது. இதையறிந்த கோபாலசிங்கம் ஆத்திரம் கொண்டு தனது மனைவியின் தங்கை குடும்பத்திற்கு ஏசிக் கொண்டிருந்தான்.

மாலினி நடத்தை கெட்டவள் என்பதே மாலினியின் தங்கை கருத்து. இந்த இரண்டு குடும்பங்களுக்கும் ஒத்துவருவதே இல்லை. ஒவ்வொரு நாளும் சண்டை நடக்கும். அது போல்தான் அன்றும் நடந்தது. ஆனால் கதைபேச்சின் தாக்கம் வினுஷாவைச் சென்றடையும் என மாலினியின் குடும்பத்தார் நினைத்துப் பார்க்கவில்லை.

வினுஷா அழுது கொண்டிருந்தாள். "நீ ஏன் அழுகிறாய் எனது ஏச்சில் அவர்கள் அடங்கி விட்டார்கள் பார்த்தாயா" எனக் கூறி வினுஷாவைத் தேற்றினான் கோவிந்தன். மாலினி எதுவும் பேசாது


அசையாது அப்படியே நின்றாள்.

வினுஷா அழுவதை நிறுத்தி இருந்தாள் வீட்டிற்குள்ளிலிருந்து வெளியே வந்தாள். ஆனால் அவளது மனதை இன்னதென்று யாரும் கண்டு பிடிக்கவில்லை. ஏன் அழுதாய் என்றும் யாரும் கேட்கவுமில்லை. கேட்கக் கூடிய பிரச்சினையாகவும் அது இருக்கவில்லை.

தருமசங்கடமான நிலையில் கோபாலசிங்கமும் மாலினியும் நின்று தவித்துக் கொண்டிருந்தனர். வினுஷா வளர்ந்து வரும் போது இப்படியான அசிங்கமான கதைகள் அவளைப் பாதிக்குமா என்பதுதான் எவருக்கும் புரியாதிருந்தது.

**வாசுகி குணரெத்தினம்**

# எல்லாமே எட்டும்வரை



கனமாய் வலிக்கின்றதா
விரக்தியாய்
வெளிப்படவில்லையா
வார்த்தைகள்,
ஏன் இந்நிலை...
காரணங்கள்
நியாயப்படுத்துகின்றதா?
உனது, எனது சந்தோசங்கள்
நிலைத்திட வேண்டாமா?
நிலைத்திட வேண்டும்
ஏணிப்படிகளை
நமதாக்குவோம்.

*செல்வி.* **இராமையா.**
**அருள்ஜோதி**

# அடையாளம்

பூக்களிடம்
என் பெயர் கேட்டேன்
புதுமை என்றது
பாக்களிடம்
என் பெயர் கேட்டேன்
பாரதி என்றது
வேய் குழலிடம்
என் பெயர் கேட்டேன்
வீணை நீ
என்றது
பேய்களிடம்
என் பெயர் கேட்டேன்
பெண் தெய்வம் நீ
என்றன
மனிதரிடம்
என் பெயர் கேட்டேன்
நீ மனுஷி அல்ல
என் அடிமை
என்றனர்.

வாசுகி குணரத்தினம்

# வேலை செய்யும் பெண்களும் சமூகக் கருத்தியல்களும்

சர்வதேச மகளிர்தினம், புதுவித கோஷங்கள், நிகழ்ச்சிகள், சொல்லாடல்கள் உலகெங்கும் அரங்கேற்றப்படும் நாளாக பல தசாப்தங்களாக இருந்து வருகின்றது. இன்னும் அன்றாட நாளிதழ்களின் மூலமும், ஒளி ஒலி ஊடகங்களின் மூலமும், பெண்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள புத்திஜீவிகளின் பொன்னெழுத்துக்களின் மூலமும், கிராம மட்டங்களில் நிகழ்த்தப்படும் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், நாடகங்கள் மூலமுமாக நாளுக்கு நாள் பெண்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட வண்ணமே இருக்கின்றன. ஆனாலும் இத்தகைய விடுதலைக் கோஷங்கள் ஆலவிருட்சமாய் பரவி நிற்க, பெண்களுடனான வன்முறைகளும் அதையொட்டும் படரிகளாகவே இருக்கின்றன.

இந்நாட்களில் பெண்கள் காலங்காலமாக அனுபவித்து வரும் கஷ்டங்களில் இருந்து மீள எழுகின்றபோது, மீண்டும் அவர்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர். “அச்சமில்லை, அச்ச மில்லை, அச்சமென்பதில்லையே” என்ற துணிவு கொண்ட பெண்கள் பல்வேறு துறைகளிலும் வெற்றி நடை போடுகின்றனர். ஆனால் அது அனைவராலும் முடிவதில்லை. தொடரும் வன்முறைகளோடு பழமை பேணிய கட்டுப்பாடுகளும் சிந்தனைகளும் புதுவடிவம் பெற, அவை கீழ்மட்ட பெண்கள் முதல் மேல்மட்ட பெண்கள்வரை பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

பொதுவில் ஆரம்பகாலப் பெண்களைப் போல் தற்காலப் பெண்களும் ‘கணவனையும் பிள்ளைகளையும் பராமரிப்பவளாகவே இருக்க வேண்டும். வீட்டுத்துறை உழைப்புத்தான் அவர்களுக்குச் சிறந்தது. மேலதிகமான சிந்தனைகளும் சமூகப் பணிகளும் எவ்வித நலனையும் கொடுக்காது. இத்தகைய பணிகளால் பாரதூரமான பின்விளைவுகளே ஏற்படும்” என்பது பலரது வாதம். இதனாற்தான் தற்காலத்தில் பெண்களின் வளர்ச்சியை தடைப்படுத்துவதற்கென்றே இவர்கள் தனிப்பட்ட அச்சுறுத்தல் கடிதம், துண்டுப் பிரசுரம்,

பத்திரிகைச் செய்தி வெளியிடல், வல்லுறவு, கொலை(ஏறாவூர் பெண் கொலை) என்று தங்களது செயற்பாடுகளை அமைத்துக் கொள்கின்றனர். உண்மை யாதெனில், வரலாற்று ரீதியாக எவ்வித ஆதாரங்களுமற்ற, பெண்கள் மீது கடமையென்ற பெயரில் திணிக்கப்பட்ட விலங்குகள் மெல்ல மெல்ல உடைக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. பொய்யான சிந்தனைகள், குதர்க்க வாதங்கள் மூலம் அதனை உயிரூட்ட முனைகின்றனர், இன்று நாம் காண்பவைகள் இதுதான்.

ஆரம்பகாலத்தை நோக்கின் பெண் என்பாள் யுத்தத்தில் பங்கு கொண்டாள், காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்தாள்; உணவு தயாரித்தாள்; தகித்தவர்களுக்கு நீர் சுமந்தாள், தலைமைத்துவ பொறுப்புக்களை வகித்தாள், கல்வி கற்றாள். இது அனைத்து வரலாறுகளையும் புரட்டிப் பார்த்தால் இன்னும் எத்தனையோ எத்தனையோ... இன்னும் சமூகத்தின் பிரதிநிதியை தேர்ந்தெடுப்பதிலும் பெண்களின் பங்கு இருந்து வந்துள்ளது. சமூகப் பணிகளில் சிறந்து விளங்கிய 'விளக்கேந்திய மங்கை' என்று அனைவராலும் புகழப்பட்ட நைற்றீன் கேளும், அன்னை தெரசாவும் வரலாற்றில் மறக்கமுடியாத சமூக சேவகிகளாவர்.

தற்காலத்திலும் பெண்களின் சமூகப்பணி இன்றியமையாத ஒரு தேவையாகவே உள்ளது. யுத்தம், இயற்கையின் கோர அழிவுகளால் பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகளும் சொத்திழப் புகளும் இடம் பெற்று வருகின்றன. இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி, அணிய உடையின்றி சிறுவர்கள் முதல் பெரியோர் வரை கஷ்டப்படுகின்றனர். வாழ்வாதாரத்தை இழந்து பலர் மனவிரக் திக்கும் மன அழுத்தங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இவர்களுக் கான அடிப்படை வசதிகளை வழங்கி, மீள் குடியேற்றும் வரைக்கும் அரசாங்கமும் தொண்டு நிறுவனங்களும் பலவகைப்பட்ட வேலைத் திட்டங்களை உருவாக்கி, அவற்றை படித்த இளைஞர், யுவதி களைக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருகின்றன. இங்கு மீள் கட்டுமானப் பணி என்பது சொகுசான வேலையல்ல. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் எத்தகைய இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். எத்தகைய வழிமுறைகளின் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்பலாம். கொடுக்கப்பட்ட வளத்தை அவர்கள் உரிய

முறையில் பயன்படுத்துகின்றனரா? அதன் மூலம் அவர்கள் எவ்வகையான முன்னேற்றங்களை அடைந்துள்ளனர். போன்ற விடயங்களை கண்காணிப்பது போன்ற விடயமாகும்.


இத்தகைய வேலைகளில் பெண்ணானவள் ஈடுபடுவதை எவரும் விரும்புவதில்லை. காலங்காலமாக இருந்து வரும் பெண்கள் தொடர்பான, மரபுரீதியான கருத்துகளும் மூட நம்பிக்கை களும் அவளை நான்கு சுவற்றுக்குள் பூட்டிவைக்கவே விரும்பு கின்றன. அதைத்தாண்டி பெண்கள் வேலைக்குச் சென்றால் அது அரசாங்க வேலையாகத்தான் இருக்க வேண்டும். அத்தொழில்தான் ஓரிடத்திலிருந்து வேலை செய்வதற்கும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வீடு வந்து சேர்வதற்கும் இலகுவானது என பலர் நினைக்கின்றனர். படித்த பட்டதாரிகள் கூட தொழிலில்லாமல் திண்டாடும் நம் நாட்டில் உயர்தரம் படித்த பெண்கள் அரசாங்கத் தொழில் செய்து அவர்க ளது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றிக் கொள்ள முடியுமா? என்பதை நம்மில் எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. நவீன தொழிநுட்பமும் அதிகரித்துவிட்ட விலைவாசிகளும் குடும்பப் பொறுப்புகளும் “அன்றாடங் காய்ச்சி” குடும்பத்தில் பிறந்த பெண்க ளுக்கு பெருந்தலையிடியாய் அமைகிறது. இன்று அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைவாய்ப்புகள் இப் பெண்களின் முன்னேற்றத் திற்கு உதவுவதாய் அமைந்துள்ளது.

எனினும் இத்தகைய பெண்களது நிலமைகளை, அவர்களது சமூக சேவை மனப்பான்மையை, அவர்களது ஆர்வங்களை திறமை களை, பணிகளை புரிந்து கொள்ளாதவர்கள் பல இடையூறுகளை விளைவித்து வருகின்றனர். சமூகச் சீரழிவிற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள்தான் பிரதான கருவி என்று தமது சிந்தனையை பல வடிவங்களில் முன் வைக்கின்றனர். (உதாரணமாக அரச சார்பற்ற, தனியார் அமைப்புக்களில் வேலை செய்யும் பெண்களுக் கெதிரான துண்டுப் பிரசுரங்கள்) ஆனால் சமூகத்தின் சிதைவிற்கான அடிப்படை குறிப்பிட்ட சமூகத்தினுள் இருப்பதை அவர்கள் உணர்வ தாய் இல்லை. வேலை வாய்ப்புக்காய் வெளிநாடு சென்று வன் முறைக்குள்ளாகும் பெண்கள் பற்றி, பாலியல் தொழிலாளர்களாய் பயன்படுத்தப்படும் சிறுவர்கள் பற்றிச் சீரழியும் கலாசாரம் பற்றி எவரும் கதைப்பதைக் காணவில்லை. இன்னும் எத்தனையோ

விடயங்கள் சமூகக் கட்டுக் கோப்பை மீறி நாளுக்கு நாள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இவைகள் களையப்படாமல் மேல் மட்டத்திற்கு மட்டும் சமூக சீர்திருத்தம் செய்ய முனைகின்றனர்.

இந்தவகையில் பெண்கள் பற்றி, அவர்களின் உரிமைகள், கடமைகள் பற்றி நாமனைவரும் சிந்தித்து செயலாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் அவர்கள் சமூகப் பணியில் ஈடுபடுவதற்கும், தொழில் வாய்ப்புக்களில் தலைமைத்துவப் பொறுப்புக்களை வகிப்பதற்கும் எமது வரண்ட சடவாத சிந்தனைப் போக்குகளை கைவிட்டு, அவர்களது நேரான பாதையில் தடைக்கற்கள் போடாமல் இருக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

–வளரும் நிலா





# கனாக் கண்டேன்

நான் கனவு கண்டேன்
அர்த்தமற்ற நாழிகைகளில்
அர்த்த (முள்ள) மற்ற
கனவுகளை கண்டேன்.

சிலவேலை பேயாகவும்
சிலவேளை உருப்பெருத்த
கண்களை உடையதாவும்
விலங்காகவும்
கனாக் கண்டேன்.

சில சமயம் நொண்டியாகவும்
சில் சமயம் தேவதையாகவும்
பல சமயங்களில் பன்றியாகவும்
கனாக்கண்டேன்.

கனவுக்களின் பின்னணியில்
சிவப்பு, மஞ்சள் வர்ணக்
கலவைகளையும்
பற்பல சமயங்களில்
கை விலங்கையும்
கண்டதுண்டு நான்

அம்மாவிடம் கேட்டேன்
இதைப் பற்றி
உனக்கு விரைவில்
திருமணம் என்றாள்.

- ஏஞூராள் -

*பளபளக்கும் உறைவாளைத் தவிர்த்து*
*குறுவாளை என்மீது வீசுகிறாய். பட்டுத் தெறிக்கிறது*
*இரண்டாக நான் சதையாலான ஆயுதம்.*

***- சுகிர்தராணி - (இந்தியா)***

# ஒழுக்கம் பெண்ணுக்கு மட்டுமா???

"ஆணின் கன்னித் தன்மையை பற்றியோ, கற்பைப் பற்றியோ இங்கு கேள்விகள் எழுப்பப்படுவதில்லை......"

கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கவியல் போன்றவற்றால் மாற்று நிலைகள் ஊடுருவா வண்ணம் நேர்த்தியாக பின்னப்பட்டிருக்கும் வலைக்குள் தனக்கான வெளியின்றி ஆண் சமூகத்தினரால் வடிவமைக்கப்பட்ட அந்தரங்க வெளியில் தொங்கிக் கொண்டிருக் கிறாள் பெண். பண்பாடு, ஒழுக்கவியல் ஆகியவை வரையறுக்கும் தரவுகள் ஆண், பெண் தன்மைக்கு பொதுவாக வைக்கப்படாமல் ஒரு சார்பு தோன்ற பெண்ணுக்கு மட்டும் நிறுவப்படும்போது மேற்கூறியவற்றின் உருவாக்கத்தைப் பற்றியும் உள்ளடக்கத்தைப் பற்றியும் மறு பார்வை செய்ய வேண்டியதன் தேவை எழுகிறது. வேட்டியை ஒரு கருவியாக முன் வைத்து ஆண்களின் ஒழுக்கங்கள் மதிப்பிடப்படுவதில்லை. ஆனால் பெண்கள் புடவையைக் கொண்டு குடும்பப் பெண்களாகவும் கலாச்சாரத்தை மீறுபவர்களாகவும் அளவீடு செய்யப்படுகின்றனர்.

ஆடை என்பதை கருவியாக வைத்து, அளந்தறியக் கூடிய அடக்கம், ஒடுக்கம், குடும்பப் பெண் போன்ற இச்சமூகத்தின் அனுமானங்கள் பெண்ணை நுகரக்கூடிய ஒரு பொருளாக நிறுத்தும் புறக்கருதுகோளிற்கு இட்டுச் செல்கிறது. அவ்வாறே கற்பு என்னும் ஒற்றைச் சொற்கருவி பெண்ணின் உடல் சார்ந்த பாலியல் ஒழுக்கம் என்ற அகக் கருதுகோளிற்கு அவளை இட்டுச் செல்கிறது. கற்பு என்னும் மதீப்பீட்டு வட்டத்திற்குள் ஆண்களை நுழைக்காத அல்லது நுழைக்க விரும்பாத இச்சமூகம் பெண்களின் கற்பு பற்றி உறுதியான எதிர்பார்ப்பை, நிலைப்பாட்டை வைத்திருக்கிறது. அந்த மோசடி அகராதியிலும் பிரதிபலிக்கப்படுகிறது.

வேர்ஜின் (Vergin) என்ற சொல்லின் பொருள் குறிப்பாக

பெண்களின் கன்னித்தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டுச் சாரத்தின் வழி நின்று திருமணத்தில் ஒருவனோடு இணையும் போது கன்னித்தன்மையும் கற்பும் எதிர்பார்க்கப்படுகின்றன. கணவனிடத்தில் கன்னித்தன்மையை இழந்தாலும் அவனோடு தொடர்ந்து வாழும் போது அவள் கற்புடையவளாக கருதப்படுகிறாள். ஆனால் இன்னொரு ஆடவனோடு கூடும் போது கற்பிழந்தவளாக சித்தரிக்கப்படுகிறாள்.

"இங்கு ஆணின் கன்னித்தன்மையைப் பற்றியோ கற்பைப் பற்றியோ கேள்வியெழுப்பப்படவில்லை. ஏனெனில் அவன் பெண்ணோடு தொடர்புடைய அனைத்துச் செயல்களிலும் எழுவாயாகவும், செய்வினையாகவும், சூத்திர தாரியாகவுமே நிலை நிறுத்தப்பட்டுள்ளான் ஆனால் பெண் தன்னை முதன்மையாக வைத்து எழுப்பப்படும் மதிப்பீடுகளில் செயற்படுபொருளாக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறாள்"

இதன் தொடர்ச்சியே அடிக்கடி செய்தித்தாள்களில் வெளியிடப்படும்.

- விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண் கைது
- கள்ளக் காதலால், மனைவி வெட்டிக் கொலை,
- இளம் பெண் மாறி மாறி கற்பழிப்பு

போன்ற சொல்லாடல்கள் இவை பெண்களை பண்பாட்டிற்குள்ளாகவே முடக்கிப்போடும் நீட்சியே. ஆக கற்பைப் பற்றி பேசும் போது பெண்களின் பாலியல் சுதந்திரம் முன்நிற்கிறது. தன் உடலை மற்றவர்களுக்கு வழங்குவதிலுள்ள தன் விருப்பத்திலிருந்து அது தொடங்குகிறது.

பெண்கள் மரபுகளைக் கட்டுடைத்து ஆண் மதிப்பீடுகளை மீறும்போது கலாச்சார பண்பாட்டுச் சீரழிவாக அது பார்க்கப் படுகிறது. இங்கும் விளிம்பில் நிற்க வைக்கப்படுபவர்கள் பெண்களே.

ஆக கற்பு என்னும் சொல்லாக்கத்தை பெண், ஆண் இரு பாலாருக்கும் பொதுத்தன்மை உடையதாக இச்சமூகம் மாற்றட்டும். இல்லையெனில் அச்சொல்லையே அழித்தொழிக்கட்டும். இவற்றையெல்லாம் விட்டு விட்டு கற்பு பண்பாடு, ஒழுக்கம் போன்றவற்றை பெண்களிடம் மட்டுமே எதிர் பார்ப்பது எந்தச் சமூகத்திற்கும் அழகல்ல அவசியமும் அல்ல.

– நன்றி –

ஊடறு (இணையத்தளம்)



# உதிரும் நினைவுகள்

*காதலிக்கும் போது*

*கரும்பாக இனித்த என் நினைவுகளும் நானும்*

*இப்போது உனக்கு*

*கசப்பது போல் எனக்குத் தோன்றுகின்றது.*

*உன்னால் வீசிஎறியப்பட்ட*

*எத்தனையோ கீறல்களும் காயங்களும்*

*ஆறாத ரணமாக இன்னும் எனக்குள்ளே....*

*உணர்ந்ததுண்டா நீ?*

*அல்லது*

*உணர முற்பட்டாயா?*

*உன் வரண்டு போன பிடிவாதமும்*

*சுயகௌரவமும்*

*என்னையும்*

*என் காதலையும்*

*விலை பேசவைக்கின்றன.*

*உன்னுள் இருக்கும்*

*நம்பிக்கையின்மையும்*

கோழைத்தனமும்
என்னையும் என்வாழ்க்கையையும்
வீணடித்துவிட்டன.

என்றாவது உன் மனசாட்சி உன்னை
கேள்வி கேட்டதுண்டா?
அல்லது
ஏற்றுக் கொண்டதுண்டா?

என் ஆசைகளும்
எதிர்பார்ப்புகளும்
கண்ணீராக மட்டுமே இன்று என்னிடத்தில்
என்னை என்னால்
கட்டுப்படுத்த முடியவில்லை
உன்னையும் உன் நினைவுகளையும்
எப்போது
மறந்து விடுகின்றேனோ
அப்போது நான்
அழப்போவதில்லை
உன் நினைவுகள்
கழுவப்படும்வரை மட்டுமே
என்கண்கள் கண்ணீரைச் சிந்தும்.

- குகநிதி குகநேசன் -

# கண்டுபிடியுங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | ▨ | ▨ |
| ▨ | 10 | 11 | 12 |
| 13 | ▨ | ▨ | 16 |
| 17 | 18 | 19 | 20 |

**இடமிருந்து வலம்**

1. ஒரு குழந்தையின் வளர்ப்பு இவர்களிடம் தங்கியுள்ளது.
5. குடும்பத்தில் கணவனும் மனைவியும் இப்படி இருக்க வேண்டும். (மாறியுள்ளது)
10. பாரதியார் காண நினைத்த பெண் இப்படி இருந்தாள்.
17. பாலியல் வல்லுறவுக்கான கூடிய தண்டனைக் காலம்

**மேலிருந்து கீழாக**

1. ஆக்கவும் ஆளவும் தெரிந்தவள்
2. கண்ணுக்குப் புலப்படாமல் பெண்ணைக் கொல்லும் சமூகக் கட்டுப்பாடு. (குழம்பியுள்ளது)
13. இறைவனை வணங்குதலை இப்படிக் கூறலாம். (தலைகீழ்)
16. இது தோற்றத்தில் அல்ல மனதில் இருக்க வேண்டும் (தலைகீழ்)

- சிறிசித்ரா -

விடை

இடமிருந்து வலம்

1. பெற்றோர்
5. கண்
10. புதுமை
17. இருபது

மேலிருந்து கீழ்

1. பெண்
2. கற்பு
13. துதி
16. இளமை

# கண்ணுறங்கு கண்ணுறங்கு



மாமரத்து கொப்பினிலே

திறந்த வெளியிலே

கிழிந்த சேலையிலே

நான் உன்னைத் தாலாட்ட

கண்ணுறங்கு கண்ணுறங்கு

என் மகளே கண்ணுறங்கு

காலம் செய்த கோலமோ

கடவுள் தந்த சாபமோ

ஊரை விட்டு சொத்தைவிட்டு

புறப்பட்டோம் வீட்டை வீட்டு

கண்மணியே கண்ணுறங்கு...

A. இலங்கேஸ்வரி

செல்வி: S.K. மர்சினா,

மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு,

ஆணாதிக்கத்தின் அடக்கு முறைகளிலிருந்து நம் பெண்களை விடுவிக்க பெரும் வீரம்கொண்டு குரல் கொடுத்து வரும் சூரியாவுக்கும் அங்கு பணிபுரியும் அனைவருக்கும் முதற்கண் என் மனமார்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களால் வெளியாகும் "பெண்" சஞ்சிகையை நான் தொடர்ந்து வாசித்து வருகிறேன். அதில் இருக்கும் அத்தனை அம்சங்களுமே பாராட்டக்கூடியது. இதுபோல் இனி என்றுமே உங்கள் பணி தொடர்ந்து செல்ல வேண்டும். அதற்காக உங்களுடன் ஒத்துழைக்கும் அனைவருக்கும் என் நன்றிகள் பல என்று கூறி விடைபெறுகின்றேன். வளர்க உன் நற்பணி வாழ்க நம் பெண் இனம்.

நன்றி

செல்வி. S.K. மர்சினா

---

மட்/ கரடியனாறு மகா வித்தியாலயம்
கரடியனாறு

ஆசிரியர்
"பெண்" (சஞ்சிகை)

அம்மணி,

பாடசாலைக்கு கிடைத்த தங்களது "பெண்" சஞ்சிகையின் தொகுதி - 11 இலக்கம் -2 வெளியீடு கிடைக்கப் பெற்றோம் மிக்கமகிழ்ச்சி

சஞ்சிகை ஆசிரியை அன்புடன் எதிர்பார்க்கும் வாசகர்கள் கருத்தாக விமர்சனமாகவே இதனை எழுதுகிறேன். உண்மையிலிருந்து பொய்வருகின்றதா? அல்லது பொய்யிலே இருந்து உண்மைவருகின்றதா? சேற்றிலே இருந்து செந்தாமரையா? செந்தாமரையில் இருந்து சேறா? ஆனால் கருவறையின் வெறுமையில் இருந்துதான் உருவம் வருகின்றது.

ஆற்றோரத்தில் கண்டல் அழகு, கடற்கரையோரத்தில் வண்டல் அழகு அடுப்பங்கரையில் சுண்டல் அழகு, சிலருக்கு சுரண்டல் அழகு பலருக்கு கிண்டல் அழகு ஆனால் நியாயத்தில் அநியாயம் அழகல்ல

தங்களது வெளியீட்டின் பக்கம் 3 இலும், 4 இலும் குகநிதி குகநேசன் அவர்களின் பெண்கள் மீதான வன்முறையும் சுரண்டலும் தலைப்பில் இவ்வாறு காணப்படுகின்றது. பக்கம் 3இல் 5 ஆவது வரியில் பாடசாலைகளில் எனவும் பக்கம் 4 இல் 3வது பத்தியில் 2,3 வரிகளில் பாடசாலையில் ஆசிரியர், அதிபர் மாணவிகளை பாலியல் வல்லுறவுக்குட் படுத்துதல் என தொடர்ந்து செல்லும் வசனங்கள்....

அதிபராய் இருப்பதனால் இவற்றை நான் குறித்துக் காட்டுகின்றேன். அதிபர், ஆசிரியரைக் கண்ட கட்டுரை ஆசிரியர், இலங்கையிலுள்ள வேறு கல்வி நிலையங்களை காணவில்லையா? உயர்கல்வி நிறுவனங்களை அவர் வேண்டுமென்றே தவறவிட்டாரா? அல்லது தற்செயல் பிழையா? என்பதை ஆராய வேண்டிய பொறுப்பு பத்திரிகை ஆசிரியருக்கு இருப்பது எதிர்கால சஞ்சிகைகளை வளப்படுத்தும் என நினைக்கிறேன். கட்டுரை ஆசிரியரும் அதிபர், ஆசிரியருடன் கற்றிருப்பார் என நினைக்கிறேன்.

செம்பு சேர்த்துதான் தங்க ஆபரணங்கள் செய்வது வெளிப்படை. மனிதன் பிழை செய்வதும் இயல்பு என குறிப்பிடப்படுகின்றது. ஆனால் நியாயம் தேடும் சஞ்சிகைகளில் அநியாயம் சேர்வது பொருத்தம் அல்ல, சகோதர வாஞ்சையுடன் இதனை எழுதுகின்றேன். தயவு செய்து விமர்சனப் பார்வைக்கு இதனை இடவும்.

வளம் பெற வாழ்த்துக்கள்.

அதிபர்
07.03.2007

**பெண்களுக்கெதிரான வன்முறை எந்த மட்டத்தினரால் நிகழ்த்தப்பட்டாலும், அது வன்முறையே. எமது நிலையத்தால் வெளியிடப்படும் "பெண்ணுரிமைக் கண்ணோட்டத்தில்" இருந்து சில தகவல்கள்...**

*பெண்ணுரிமைக் கண்ணோட்டம் -* *மடல் இலக்கம் - 3*

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| தபால் மூலம் | 06.04.2002 | 30 | மட்டக் களப்பு | மருத் துவர் (கணவர்) | வீட்டில் | மட்/வைத்திய சாலையில் வேலை செய்யும் கணவன், தினமும் மனைவியை கொடுமைப் படுத்தல், அடித்தல், பாலியல் வல்லுறவு கொள்ளல் | |
| *மடல் இலக்கம் - 4* | | | | | | | |
| அந்த ஊர் இளை ஞர்கள் மூலம் | 24.09.2003 | 11 | கல்முனை | விடுதிக்குப் பொறுப் பானவர் (பாஸ்டர்) | நாவலடி நல்லா சியார் இல்லம் | பாஸ்டர் சிறுமியை அடித்து சித்திரவதை செய்ததுடன் பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளார் | மட்/ நீதிமன்றில் வழக்கு விசாரணை நடந்து வருகிறது |

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 08.03.2002 | 18 | ஆரை யம்பதி | கிழக்குப் பல் கலைக் கழக மாணவன் | குற்றம் சாட்டப் பட்டவர் வீட்டில் | பாடசாலை மாணவியான இவருடன் குற்றவாளி உடல் உறவு கொண்டதன் மூலம் கர்ப்பினி யாக்கப்பட்டார் பின்னர் சட்டவி ரோதமாக கருக்கலைப்பு இடம் பெற்றுள்ளது | வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார் |
| சூரியா | 14.09.2002 | 16 | கொக் குவில் | ஆசிரியர் பயிற்சிக் கலா சாலை மாணவன் | சிறுமி யின் வீட்டில் | திருமணம் முடிப்பதாகக் கூறி, குற்றவாளி சிறுமியுடன் பாலியல் உறவு மேற் கொண் டுள்ளார் இதனால் சிறுமி கற்பம டைந்து குழந்தை பெற்றுள்ளார் எனினும் குழந்தைக்கு தான் தந்தை இல்லையென குற்றவாளி மறுக்கிறார் | வழக்கு தாக்கல் செய்யப் பட்டு விசாரணை இடம் பெறுகிறது. DNA பரிசோத னைக்கு கட்டளை யிடப் பட்டுள்ளது |

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட்/ நீதி மன்றம் ஊடாக | 16.02.2001 | 28 | செட்டி பாளையம் | விசேட அதிரடிப் படை வீரர் (STF) | செட்டி பாளையம் | கடற்கரை வீதியிலுள்ள தனதுஅக்காவின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த இப் பெண்ணை விசேட அதிரடிப்படை வீரர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தி யுள்ளார். | |

பெண்ணும் ஆணும் சரிபாதி
சமத்துவம் எங்கள் பொது நீதி
வேற்றுமை இல்லை
பேதமை இல்லை
வாழும்... பெண்... பெண்... பெண்...
பாரின்... கண்... கண்... கண்...

- ஸ்நேகா -

# வருடாந்த சந்தா – பெண்

ஐரோப்பா, வட அமெரிக்கா,
அவுஸ்திரேலியா
USS 5
இந்தியா
ரூபா 300.00
இலங்கை
ரூபா 100.00


**சந்தா விண்ணப்பம் 200........................**
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்.**

பெயர் : ..................................................................
விலாசம் : ..................................................................
திகதி : ..................................................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
இல:20, டயஸ் வீதி,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
No: 20, Dias Lane,
Batticaloa,
Sri Lanka.



வெட்ட வெளியினிலே
பட்டப் பகலினிலே
நட்ட மரத்தினிலே
ஆடுது பார் தொட்டில் ஒன்று
தொட்டிலுக்குள் புரளுவது
ஏக்கதுடன் எதிர்காலம்

கடலுக்குள் போட்ட கல்லோ – இது
கிணற்றுக்குள் இட்ட நெல்லோ
கையில் வந்து கிடைத்திடுமோ – எல்லாம்
பகற் கனவுப் பால் நிலாவோ..?
கனவுதான் பலித்திடுமோ – எதிர்
காலந்தான் மலர்ந்திடுமோ?

ISSN - 1391 - 6122